விலை : 20.00 website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## *Valampurii*

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 10 வெள்ளிக்கிழமை (26.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392 (C-4991)

# இராணுவ முகாம்களை அகற்றவே மாட்டோம்!

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என இராணுவத் தளபதி கிரிஷாந்த அறிவிப்பு



(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு விடயத்தில் இன்றும் அச்சுறுத்தல் காணப்படுகின்றமையினால் வடக்கு கிழக்கில் இருந்து எந்தவொரு இராணுமுகாமையும் அகற்றப்போவதில்லை என தெரிவித்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, இறுதி யுத்தத்தில் நாற்பதாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறுவதும் அறுபதாயிரம் பொதுமக்கள் காணாமல்போனதாக கூறுவதும் முழுப்பொய். அதேபோல் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு விஷஊசி ஏற்றப்படவில்லை என்பதை உறுதியாக கூறமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## பல்கலை மோதல்;
## வழக்கு விசாரணை செப்.22 ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் உள்ளிட்ட 3 மாணவர்கள் மீதான வழக்கு விசாரணையினை எதிர்வரும் செப்டெம்பர் 22 ஆம் திகதிக்கு யாழ். நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் ஒத்திவைத்துள்ளார்.

கடந்த மாதம் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் மாணவர்களுக்கு இடையில ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது. 24-ம் பக்கம் பார்க்க....

உள்ளே...
கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை - 2016
மாதிரி வினாத்தாள்

## மீளவும் ஊழல் விசாரணையா?
## பரஞ்சோதி முன்மொழிந்த பிரேரணை தோற்கடிப்பு

## சட்டமூலத்தில் திருத்தம் வரும்

(கொழும்பு)

தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள காணாமல்போனோர் தொடர்பாக செயல்படும் சட்டமூலத்தில்

## காணாமல்போனோர் குறித்து சான்றிதழ் வழங்கும் சட்டமூலம்
## நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்

வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர இந்த சட்டமூலம் காரண

## மீளவும் ஊழல் விசாரணையா?

# பரஞ்சோதி முன்மொழிந்த பிரேரணை தோற்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மீது தெரிவுக்குழுவை அமைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உறுப்பினர் பரஞ்சோதியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பினால தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து குறித்த பிரேரணையை ஒரு அறிவித்தலாக முதலமைச்சருக்கு அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரஞ்சோதியினால் நேற்றைய

24ஆம் பக்கம் பார்க்க....

# சட்டமூலத்தில் திருத்தம் வரும்

(கொழும்பு)

தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள காணாமல்போனோர் தொடர்பாக செயல்படும் சட்டமூலத்தில் திருத்தங்களை கொண்டு வர முடியுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய 31 திருத்

24ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல்போனோர் குறித்து சான்றிதழ் வழங்கும் சட்டமூலம்

## நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான சான்றிதழ்களை அவர்களது உறவினர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது, இந்த சட்டமூலம் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர இந்த சட்டமூலம் காரணமாக காணாமல்போனோரின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க முடியுமென்று தெரிவித்தார்.

கடந்த 30 ஆண்டுகளுக்குள் காணாமல்போனோர் தொடர்பாக

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த

# அரசியல் கைதியை காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான இராசையா ஆனந்தராஜா,

23ஆம் பக்கம் பார்க்க....

# பிரித்தானிய கடலில் மூழ்கி 5 ஈழத்தமிழர்கள் பலி!

(லண்டன்)

இங்கிலாந்தின் கிழக்கு சசக்ஸ் கடலில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் 2 பேர் உள்ளிட்ட 5 ஈழத்தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களான சத்தியநாதன் கோபிகாந்த், சத்தியநாதன் கேனுஜன மற்றும் ஸ்ரீஸ்காந்தராசா இந்துசன், ஆகிய 3 பேருடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த நிதர்சன் மற்றும் குரு ஆகிய ஐந்து ஈழத்தமிழ் இளைஞர்களே நேற்று முன்தினம் பகல் வேளை கடலில் குளிக்கும் போது பரிதாபகரமாக உயிரிழந்துள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

# "போதையிலிருந்து விடுதலையான நாடு"

(யாழ்ப்பாணம்)

போதையிலிருந்து விடுதலையான நாடு எனும் தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் மாவட்ட மட்ட 8 ஆவது நிகழ்வு எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம திகதி யாழ்.பொது நூலகத்துக்கு அருகாமையில் உள்ள திறந்தவெளியரங்கில் பிரமாண்டமாக கொணடாடப்படவுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

# மன்னாரில் கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரொயின் போதைப்பொருள் மீட்பு!



## ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருளுடன் மன்னார் கட்டையடம்பன் பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கைது செய்துள்ளதாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உதயகுமாரசிங்கம் கௌசிகன் தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

# 30 துப்பாக்கிகள் மீட்பு



24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 75 போத்தல் சாராயத்தை எடுத்துச் சென்றவர் கைது

(கரணவாய்)

அரச சாராயத்தை அனுமதிப் பத்திரமின்றி எடுத்துச் சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் சீல் செய்யப்பட்ட 75 போத்தல் சாராயத்தினையும் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் விஷேட பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்னதிம் புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவின் கீழ் இயங்கும் விஷேட பொலிஸ் அணியினர் சுற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது குடத்தனைப் பகுதியில் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் ஒன்றினைச் சோதனையிட்ட போது பெட்டி ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட 75 போத்தல் சாராயத்தினை கைப்பற்றியதுடன் அதனை எடுத்துச் சென்ற குடத்தனையைச் சேர்ந்த 30 வயதுடைய நபரினைக் கைது செய்தனர்.

சாராயத்தினையும், கைது செய்யப்பட்ட நபரையும் பருத்தித்துறைப் பொலிஸில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

## பிரேரணை அனுமதி தவறு - அஸ்மின் சரியாகவே அனுமதித்தேன் - சீ.வீ.கே

(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இல்லாத நிலையில் அவர்கள் தொடர்பான பிரேரணைகளை சபையில் அனுமதிப்பது தவறாகும் என அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திற்கு சுட்டிக்காட்டிய உறுபபினர் அஸ்மின், இந்த பிரேரணை எடுத்துக்கொள்ளப்பட்டதன் மூலம் உணர்ச்சி அரசியலை செய்வதற்கு சிலர் விரும்புகின்றனர் எனவும் சாடியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் அறுபதாவது அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது உறுப்பினர் பரஞ்சோதியின் பிரேரணையை வழிமொழிய அனுமதித்தமை தொடர்பில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வுகளில் முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் சபையில் இல்லை என கூறப்பட்டு, அவர்கள் தொடரபிலான எத்தனையோ விடயங்கள் பிற்போடப்பட்டிருந்தன. அதே போல் இன்றும் அவர்கள் இருவரும் சபையில் இல்லை. ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட பிரேரணை ஒன்றை முன்மொழிவதற்கு அவைத்தலைவர் அனுமதி அளித்துள்ளார்.

எந்த பிரச்சினையையும் உணர்ச்சி பூர்வமாக அணுகுவது ஆரோக்கியமற்றது என முதலமைச்சர் கூறியுள்ளதனை நான் வரவேற்கின்றேன். அவர் கூறியது போலவே உணர்ச்சிகர அரசியலுக்காகவே இந்த பிரேரணையும் இன்று எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இங்கு நடைபெறும் ஒவ்வொரு விடயமும் எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டுவனவாக இருக்க வேண்டும்.

நாங்கள் யாரும் ஊழலுக்கு ஆதரவானவர்கள் இல்லை. ஆனால் அணுகுமுறை ஒன்று உண்டு. அதனை அனைவரும் பின பற்ற வேண்டும். உறுப்பினர் பரஞ்சோதியின் விவசாய அமைச்சு மீதான பிரேரணையை முன்மொழிய அனுமதித்தது அவைத் தலைவரது தவறாகும் என அஸ்மின் சுட்டிக்காட்டினார். இதன் பின்னர் பேசிய அவைத்தலைவர சீ.வீ.கே.சிவஞானம், பிரேரணை ஒன்றை கொண்டுவருவது உறுப்பினர் ஒருவருடைய சுதந்திர மாகும் அதில் நான் தலையிட முடியாது. மேலும் உறுப்பினர் பரஞ்சோதி கொண்டுவந்த பிரேரணை எடுத்துக்கொள்ளப்படும் போது எந்த அமைச்சரும் இருக்க வேண்டிய திலலை. அது அவருடைய பிரேரணை அமுலாக்கம் தொடர்பிலானதாகும என கூறி அஸ்மினின் குற்றசசாட்டை அவைத் தலைவர் நிராகரித்தார். (செ-4)

## முச்சக்கரவண்டி எரிந்து நாசம்

(கரணவாய்)

வீட்டின் முன்றத்தே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று தீயில் எரிந்து நாச மானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் வல்வெட்டித் துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொண்டைமானாறுப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிற்கு முன்புறத்தே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி திடீரெனத் தீப்பற்றி எரிந்ததாகவும் இதனையடுத்து அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் தீயினை அணைத்த தாகவும் கூறப்படுகிறது. (செ-60)

## Holy Cross School of Health Science

**உதவி தாதி பயிற்சி நெறி (Nurse Assistance)**
**பயிற்சி நெறிக்காலம் - 01 வருடம்**
**பயிற்சி நேர வகுப்புக்கள் - திங்கள் - வெள்ளி**
**விண்ணப்ப முடிவு திகதி - 31.08.2016**

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தவர்கள் சுயவிபர கோவையினை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**Mobile. No :- 077 115 9391**
**Telephone. No :- 021 300 1102**

(5728)

## பகிரங்க ஏல விற்பனை

ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான புனரமைப்பின் மீதமாகவுள்ள பெறுமதிமிக்க மரம் தடிகள் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு பொதுசபை தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம் விற்பனைக்கு உள்ள பொருட்கள்.

**தீராந்திகள் :- 6x6,6x4,6x2**
**பனை மரங்கள் 15′ உட்பட்டவை ஏல விற்பனை**
**இடம் :- தேவஸ்தான முன் வீதி**
**காலம்:- 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- பிற்பகல் 3.00 மணி**

பொருட்களை வீதியில் பார்வையிடலாம் ஏலத்தில் பெற்றுக் கொள்பவர்கள் அதற்குரிய பணம் முழுவதும் செலுத்திய பின்பே அப்புறப்படுத்த வேண்டும்.

**தேவஸ்தான சபை**
**தலைவர்**

(C-5549)

## இதயம் நிறைந்த கண்ணீர் அஞ்சலிகள்



**Sr. Zandra A.C**


அருட்சகோதரி அவர்கள் இறைவனடி சேர்ந்ததை இட்டு இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்து துயர் அடைகிறோம். இவரின் ஆன்மா இறைவன் பாதம் சேர்ந்திட பிரார்த்திக்கின்றோம்.

**SHAMROCK ACADEMY**
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 07 1933
ஆண்டவன் மடியில்
06 09 2015

திதி : நவமி
26.08.2016



### அமரர் தம்பிஐயா குணநாயகம் (ராசு)

(உரிமையாளர் குமரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி,
கலைவாணி மில் கொக்குவில்)

ஆண்டொன்று மறைந்ததையா நீங்கள்
எம்மைப் பிரிந்து. நாள்தோறும் தவிக்கிறோம்
உங்களை இழந்து. வாழ வைத்த தெய்வம்
எங்கள் அன்பு அப்பா சென்றதெங்கே?
தினம் தோறும். தேடுகின்றோம் காலமெல்லாம்
வாழ்வோம் உங்கள் நினைவோடு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

**பலாலி வீதி,**
**திருநெல்வேலி வடக்கு.**

(5731)

# ரணிலுடன் மகிந்த ரகசிய ஒப்பந்தம்!

## அமைச்சர் யாப்பா சர்ச்சை



(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் இது பற்றி கூட்டு எதிர்க்கட்சி மகிந்தவிடம் எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

கடந்த 2007ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் சேர்ந்து செயற்படுவதாக குறித்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை ரணிலும் மகிந்தவுமே கைச்சாத்திட்டுள்ளனர்.

இதைப்பற்றி கூட்டு எதிர்க் கட்சியினர் மகிந்தவிடம் எந்த கேள்விகளையும் எழுப்பவில்லை. ஆனால் மைத்திரியிடம் மட்டும் கேள்விகளை எழுப்புகின்றனர் என சுட்டிக் காட்டினார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து ஒற்றுமையாக செயற்படுகின்றது என இராஜாங்க அமைச்சர் கூறினார்.

மேலும். ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சம்பந்தமே இல்லாமல் வெறுப்பை வெளிப்படுத்துவதாகவும் இவர்களால் ஒருபோதும் தனித்து ஒரு கட்சியை ஆரம்பிக்க முடியாது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். (இ-7)

### விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில்

## வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூரில் விசேட நடமாடும் சேவை

### யாழ். அரச அதிபர் தகவல்

வெளிவிவகார அமைச்சின் கொன்சுலர் பிரிவினரால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை வடமாகாண மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் நடமாடும் சேவையொன்று இம்மாதம் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை பருத்தித்துறை வீதியில் நல்லூர் ஆலயத்திற்கு முன்புறமாக இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் குறித்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேலும் இந்நடமாடும் சேவையில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளும் பங்கு பெறுவதுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சின் கொன்சுலர் பிரிவினரால் பின்வரும் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இதில் சர்வதேச தேவைகளுக்காக ஆவணங்களை சான்றுறுதிப்படுத்துவதற்கான தேவைகளை உடைய பொதுமக்களுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டலும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் பிறப்பு. விவாகம் மற்றும் இறப்புக்களை பதிவு செய்தல், கடவுச்சீட்டு சம்பந்தமான வழிகாட்டல்கள். பல்வேறு கொன்சுலர் அலுவல்கள். இரட்டை பிரஜாவுரிமை மற்றும் குடியுரிமை பெறுதலுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நடமாடும்சேவையில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஜனாதிபதி அவுஸ்திரேலிய நீதிமன்றில் ஆஜராவாரா?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2009ஆம் ஆண்டு மகாவெலி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் உலக வங்கி திட்டத்திற்காக அவுஸ்திரேலிய நிறுவனம் இரண்டிலிருந்து இலஞ்சம் பெற்றுள்ளமை தொடர்பில் அந்நாட்டின் பெடரல் பொலிஸ் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் அடங்கிய நீண்ட அறிக்கையினை அவுஸ்திரேலியாவின் பிரதான இணையம் ஒன்று வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதிக்கு எதிரான குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவுஸ்திரேலியாவின் பிரதான ABC வானொலி ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பெடரல் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளின் இறுதியில் ஜனாதிபதி அந்நாட்டின் நீதிமன்றத்தால் குற்றவாளியாக நிருபிக்கப்பட்டால் வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்றில் குற்றம் சுமத்தப்பட்ட முதலாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என்றும் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை இலங்கை ஜனாதிபதி ஒருவர் தொடர்பில் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வெளிநாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதும் இதுவே முதல் சந்தர்ப்பம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## அமைச்சர்கள் பயணித்த ஹெலி அவசரமாகத் தரையிறங்கியது



பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ. நவீன் திஸாநாயக்க ஆகியோர் பயணித்த ஹெலிகொப்டர். அதிக பனிமூட்டம் காரணமாக நுவரெலியா கடுமானவ காபி மகடகொட பகுதியிலுள்ள மரக்கறி தோட்டமொன்றில் அவசரமாக நேற்று தரையிறக்கப்பட்டது. (இ-7)

## இலங்கை மாணவனுக்கு பிரித்தானியாவில் சிறை

பிரித்தானியாவில் உள்ள நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் இலங்கை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மாணவன் குறித்த நிறுவனத்தில் இருந்து 2 இலட்சம் பவுண்ஸ் நிதியை மோசடி செய்வதற்கு உதவிய குற்றச்சாட்டிலேயே இவருக்கும் இந்தியர் ஒருவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொலைச் சந்தேக நபர்கள் ஐவரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை

பம்பலப்பிட்டியில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட வர்த்தகர் மொஹமட் சகீப் சுலைமானின் கொலை தொடர்பில் சந்தேகிக்கப்படும் ஐவரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸினால் நேற்று விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையுத்தரவினை குடிவரவு. குடியகல்வு கட்டுபாடு மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு பிறப்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த 5 சந்தேக நபர்களுக்கும் இந்த கொலை தொடர்பில் நன்கு அறிவதாக கொழும்பு குற்றப்புலனாய்வு விசாரணைப்பிரிவு நீதி மன்றிற்கு அறிவித்துள்ளதாகவும் இதனையடுத்தே நீதிமன்றத்தால் இந்த தடையுத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.(இ-7)

## படகு கவிழ்ந்து மீனவர் மரணம்

மாத்தறை - வெலிகம கப்பரதோட பிரதேசத்தில் தொழிலுக்கு சென்ற மீனவர் ஒருவர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 69 வயதுடைய மீனவர் எனவும். கரையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்திலே குறித்த படகு கவிழ்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மீன்பிடிக்க சென்ற இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் உயிராபத்து எதுவும் இன்றி தப்பிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அரச மற்றும் சிவில் உதவிப் பிரதிநிதிகளுடன் அமெ. பிரதி இராஜாங்க செயலர் சந்திப்பு



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் வில்லியம் ஈ ரொட், அரசாங்க மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பேச்சுக்களை நடத்துவதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவச் செயலாளர் வில்லியம் ஈ ரொட் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்திருந்தார்.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதியும், நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான செயலகத்தின் தலைவருமான சந்திரிகா குமாரதுங்கவை வில்லியம் ஈ ரொட் மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆகியோர் நேற்றுக் காலை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அத்துடன், இலங்கையின் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்த இவர்கள், ஜனநாயக கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினரை வில்லியம் ஈ ரொட் தலைமையி லான குழுவினர் நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்து பேச்சு நடத்தினர்.


இச்சந்திப்பில், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அரசாங்கத்துடன் இணைந்து அமெரிக்கா பணியாற்றுவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார். (செ-11)

# சுகாதார குறைபாடுகள் காரணமாக விற்பனை நிலையத்துக்கு சீல் வைப்பு!

பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்த மன்னார் "லங்கா சதொச" விற்பனை நிலையம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக நேற்றை தினம் வியாழக்கிழமை காலை தொடக்கம் காலவரை யின்றி சீல் வைத்து மூடப்பட்டுள்ளதாக மன்னார சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி. லெம்பேட் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மக்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கடந்த 23 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் மன்னார் "லங்கா சதொச" விற்பனை நிலையத்திற்குச் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது பல்வேறு குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டது.

அதனடிப்படையில் காலாவதியான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமை, காலாவதி திகதி அற்ற பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டமை, எலியின் நடமாற்றம் மற்றும் அதன் எச்சங்கள் பொருட்களுடன் கலந்துள்ளமை, களஞ்சிய சாலை உரிய முறையில் பராமரிக்கப்படாமை, நிலப்பகுதி அழுக்காக காணப்பட்டமை போன்ற 5 குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில குறித்த "லங்கா சதொச" விற்பனை நிலையத்திற்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் சுகாதார வைத்திய



செய்யப்பட்டதையடுத்து.

குறித்த வழக்கு நேற்று வியாழக் கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த லங்கா சதொச விற்பனை நிலையத்தை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டார்.

அதற்கமைவாக நேற்று வியாழக் கிழமை காலை குறித்த லங்கா சதொச விற்பனை நிலையம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளதாகவும், அடையாளம் காணப்பட்ட குறித்த பிரச்சினைகள் நிவர்த்தி செய்த பின் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த லங்கா சதொச விற்பனை நிலையம் திறக்க அனுமதி வழங்கப்படும் எனவும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-9)

# ஆஸி அணியின் அதிரடி மாற்றம்
# நாடு திரும்பினார் ஸ்மித் பொறுப்பேற்றார் வோனர்

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3-0 தோல்வியடைந்த நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்று முடிந்த 2 போட்டிகளில் இரு அணிகளும் ஒவ்வொரு போட்டியில் வெற்றிபெற்று 1-1 என்று சமநிலை பெற்றுள்ளன.

இந்நிலையில், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீபன் ஸ்மித் தலைமைப் பொறுப்பை வோர்னரிடம் கையளித்துவிட்டு தாய்நாடு திரும்பியுள்ளார்.

இத் தொடரில் மீதமுள்ள 3 ஒருநாள் போட்டிகளுக்கும் 2 இருபது -20 போட்டிகளுக்கும் புதிய அணித்தலைவராக டேவிட் வோனர் நியமிக்கப்பட்டுள்ளார்.



இதுகுறித்து அவுஸ்திரேலிய அணியின் பிரதம தேர்வாளர் ரோட் மார்ஸின் தெரிவிக்கையில், அடுத்து வரவுள்ள தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் முழுமையான கவனத்தை செலுத்தும் முகமாகவே ஸ்மித்துக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு, வோர்னர் தலைவராக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (க)

# ஆஸி அணியுடன் மக்ஸ்வெல் இணைவு

இலங்கை அணிக்கு எதிராக இருபது-20 போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய அணியில் அதிரடி மன்னரான மக்ஸ்வெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் மக்ஸ்வெல் சேர்க்கப்படவில்லை. அவருக்கு பதிலாக ட்ரெவ்ஸ் ஹெட் இணைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா 3-0 என தொடரை இழந்தது. ஒருநாள் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன.

மேலும், அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்மித்துக்கு பதிலாக புதிய தலைவராகவார்னர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒருநாள் தொடரைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இந்த தொடரில் விளையாட மக்ஸ்வெல், கிறிஸ் லின், ஜோன் ஹாஸ்டிங் ஆகியோருக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா இருபது-20 அணி

டேவிட் வோர்னர் (அணித்தலைவர்), ஸ்கொட் போலண்ட், ஜேம்ஸ் பால்க்னர், ஆரோன் பிஞ்ச், ஜோன் ஹாஸ்டிங், டிராவிஸ் ஹெட், மொய்சஸ் கென்றிகியூஸ், கிறிஸ் லின், ஷான் மார்ஷ், கிளென் மெக்ஸ்வெல், பீட்டர் நெவில், மிட்செல் ஸ்டார்க், ஆடம் சம்பா. (க)



# சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து விடைபெறுகிறார் டில்ஷான்

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான திலகரட்ண டில்ஷான், சர்வதேச ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

2019 உலக கோப்பைக்கான அணியை உருவாக்கும் பணியில் இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் மற்றும் தேர்வாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தேர்வாளர்களிடமிருந்து வந்த அழுத்தத்தை தொடர்ந்தே 39 வயதான டில்ஷான் தனது ஓய்வை அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணிக்கெதிராக தம்புள்ளையில் இடம்பெறவுள்ள 3-வது ஒருநாள் சர்வதேச போட்டியுடனும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ள 2வது 20 ஓவர் போட்டியுடனும் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக டில்ஷான் தெரிவித்துள்ளார். இலங்கை அணியின்




சகலதுறை ஆட்டககாரரான டில்ஷான், 87 டெஸ்ட் போட் டிகளில் விளையாடி 5492 ஓட்டங்களையும் 39 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள் ளார். இதேவேளை 329 சர்வதேச ஒருநாள போட்டிகளில் விளையாடி 10248 ஓட்டங்களையும் 106 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார். 78 இருபது-20 ஓவர் போட்டிகளில் விளையாடி 1884 ஓட்டங்களையும் 7 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (க)

# சளி அடைப்பினால் குழந்தை மரணம்!

சளி அடைப்பின் காரணமாக 6 மாத ஆண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ் வேலணை பகுதியில் இடம்பெற்றது. இதில் பூநகரி பள்ளிக்குடா 4ம் கட்டையினை சேர்ந்த ஐயப்பன் நிதர்சன் (வயது 6 மாதங்கள்) என்ற ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது.

பூநகரியிரிலிருந்து வேலணைப்பகுதிக்கு உறவினர்களை சந்திப்பதற்காக வந்திருந்த வேளையிலே குழந்தைக்கு சளி அடைப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. குழந்தையின் சடலமானது பிரேத பரிசோ தனைக்காக யாழ் போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

# ‘போதையற்ற தேசம்’ வடமராட்சி கிழக்கில் நேற்று விழிப்புணர்வு நடவடிக்கைகள்







வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் *போதையற்ற தேசம்* எனும் தொனிப்பொருளில் போதைப்பொருள் அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவது தொடர்பான கருத்தறியும் செயலமர்வு நேற்று காலை 9 மணியளவில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு ஜனாதிபதி செயலணியின் விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கலந்து கொண்டு போதைப் பொருளிலிருந்து விடுபடு வது தொடர்பான கருத்துக்களையும் பல்லூடக படக்காட்சிகளையும் வழங் கினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன் கருத்துக்களை வழங்கினார்.

மதுவரித்திணைக்களத்தினர், இராணுவத்தினர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியசாலை ஊழியர் கள், பிரதேச செயலக ஊழியர்கள்,கிராம மட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். செயலமர்வுநிறைவுற்றதும் பிரதேச செயலக வளாகத்திலிருந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச் சென்று போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற் படுத்தி துண்டுப் பிரசுரங்களையும் வழுங்கினர். அவ்விடத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அனுரா தலைமையிலான போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான நாடக நிகழ்வு மருதங்கேணி வைத்தியசாலைக்கு முன் பாக நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3-64)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 21 09 1944



உதிர்வு 27 07 2016

அமரர்
**கனகரத்தினம் ரோகினியம்மா**

பி.இடம்:-வல்வெட்டித்துறை, வ.இடம்:-தெல்லிப்பழை
தற்காலிகம்:- ஊரிக்காடு, வல்வெட்டித்துறை

விதையாய் இருந்த எம்மை
விருட்சமாய் மாற்றி விட
வேராய் எமக்கு அருள் தந்தீர்
உமை நினைப்பதை விட எமக்கு வேறென்ன வேலை
முப்பத்தொராவது நாள்ஆனதோ இன்று
மாறாதம்மா எம்மைவிட்டு உன் நினைவுகள்

26.08.2016 இன்று வெள்ளிக்கிழமை ஊரிக்காட்டில் உள்ள அவரது மூத்த மகளின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழக லேன் ,ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(5706)

தகவல்:-
குடும்பத்தினர்.


## இராசி பலன்

26.08.2016
(ஆவணி 10, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிவரை
நவமி முன்னிரவு 9.02 மணிவரை
ரோகினி பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி- விசாகம் இரவு 1.20 மணிக்கு மிது-சந் | | |
| | | | சூரி, புத ராகு, சுக் |
| செவ் | சனி | | குரு |

**மீனம்**: நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**மேடம்**: எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**: குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்**: சுப விரயங்கள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கும்பம்**: பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உற்சாகமான நாள்.

**கடகம்**: வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**: வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**: தொட்ட காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, வெளிநாட்டு தொடர்புகள் நன்மை தரும், உறவினர்களின் உதவியுண்டு.

**தனுசு**: இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**: பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி**: புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பற்றாக்குறை அகன்று பணவரவு கிடைக்கும் நாள், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

# ஏழு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இ.போ.ச. ஊழியர்கள் 30 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடந்த நான்கு வருடத்திற்கான ஊழியர் சேமலாப நிதியை உடன் வைப்பிடல் வேண்டும், மோசடிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் உள்ளிட்ட ஏழு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை போக்குவரத்துச்சபையின் யாழ்.சாலை ஊழியர்கள் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 30ஆம் திகதி ஒருநாள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.**

மோசடிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தல், ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடந்த நான்கு வருடத்திற்கான ஊழிய சேமலாப நிதியை உடன் வைப்பிலிடல், பொறிவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்பு கொடுப்பனவை உரிய தவணைகளில் வழங்க நடவடிக்கை எடுத்தல்,பாரபட்சமான முறையில் வழங்கப்படுகின்ற தண்டனை உடனடியாக நிறுத்தப்படல், பாரபட்சமான முறையில் கையூட்டல் முறையில் வழங்கப்படுகின்ற கடமைகள் நிறுத்தப்படல், ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவையான பணத்தை உடனடியாக பெற்றுக்கொடுத்தல், சாரதி காப்பாளர்கள், பொறிவலர்கள் பல வருடகாலமாக பதவி உயர்வு இன்றி காரியாலயங்களில் கடமை புரிகின்றார்கள். இவர்களுக்கு உரிய பதவி அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுத்தல் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு இலங்கை சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம் (யாழ்.சாலை), இலங்கை சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம் (கிளிநொச்சி சாலை), தமிழ்த்தேசிய போக்குவரத்து ஊழியர்தொழிற்சங்கம் (கோண்டாவில் சாலை), இலங்கை போக்குவரத்துச் சபை (யாழ்ப்பாணம்), இலங்கை போக்குவரத்துச் சபை (காரை நகர்) போன்ற பல சங்கங்கள் ஆதரவளித்துள்ளன. (இ-7)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்டைதீவு அருள்மிகு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகமும் நூதன பஞ்சதள இராஜகோபுரகும்பாபிஷேகமும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.04 மணி முதல் நடைபெறும். எதிர்வரும்3 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-3)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் தலைவர் பொ.இராசரத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-3)

## மத்தியஸ்த அமர்வு நடைபெறமாட்டாது

நல்லூர் மத்தியஸ்த சபையின் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்று வரும் அமர்வு, அப்பாடசாலையில் வேறொரு நிகழ்ச்சி நடைபெறவுள்ள காரணத்தால் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்றும் அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வழமை போல் நடைபெறும் எனவும் மத்தியஸ்த சபை தவிசாளர் நா.நித்தியாணந்தன் அறிவித்துள்ளார். (இ-3)



கோப்பாய் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணையும் தொழில் வழிகாட்டல் தொடர்பான பயிற்சி நெறியும் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் உரையாற்றுவதையும் பங்கேற்றவர்களையும் படங்களில் காணலாம்.

## கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் நாளை

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் பொதுக் கூட்டம் நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசார பேர வைத் தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிறிதலைமையில் இடம்பெறும். (இ-3)

யாழ்.செய்திகள்

## ஆலயத்திற்கு ஒலிபெருக்கி சாதனங்கள்



அல்வாய் சாமணந்துறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை வட மாகாணசபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் வழங்கியுள்ளார். வட மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து இவ் ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறைப்பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், ஆலயத் தரப்பினர் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

## ஆங்கில கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில இலவசக் கற்கை நெறி அடுத்தமாத பிற்பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மேற்படி கற்கை நெறிக்கு க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி தகைமையாகக் கொள்ளப் படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தொழில்நுட்பவியல் கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## வெள்ளை நாகம் காட்சியளிப்பு



பொலிகண்டி கந்தவன முருகன் ஆலயத்தில் அமைந்துள்ள தீர்த்தக்கிணற்றில் வெள்ளை நாகம் காட்சியளித்தது. அதனை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர். (இ-60)



இலங்கை வங்கி கோப்பாய் கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரசேவை (ATM) நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் இலங்கை வங்கி வட மாகாண உதவி பொது முகாமையாளர் எம்.ஜே. பிரபாகரன் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் து.அருள்ராஜ் ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் வட மாகாண பிரதேச முகாமையாளர் கோ.சேதுகாவலர், கோப்பாய் முகாமை யாளர் திருமதி செ.செந்தூரன் மற்றும் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (மல்லாவி செய்தியாளர்)

## பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடீன் கொலை

# ஜனாதிபதி செயலக தொலைபேசி அழைப்பு விபரங்கள் அழிப்பு!

(கொழும்பு)

**பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடீன் சடலமாக மீட்கப்பட்ட தினத்தன்று, ஜனாதிபதி செயலகத்திலிருந்தும் அலரி மாளிகையிலிருந்தும் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டேமியன் பெரேராவுக்கு மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் தொடர்பான விபரங்கள், ஜனாதிபதி செயலகத்திலிருந்து அழிக்கப்பட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு, நேற்று முன்தினம் கொண்டு வந்தனர்.**

ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில், தொலைபேசி அழைப்பு வசதிகள், அவற்றைப் பதிவு செய்து வைத்தல் போன்றனவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள், இச்சம்பவம் தொடர்பான அனைத்து விபரங்களையும் அழித்துள்ளதுடன், அவர்களது பதவிகளிலிருந்தும் இராஜினாமாச் செய்துள்ளதாக, சீ.ஐ.டி தெரிவித்தது.

இந்தத் தரவுகளை அழித்து, பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கான, பரந்தளவிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, நீதிமன்றத்திடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

இந்தத் தரவுகளைச் சேமித்துவைக்கும் கணனியைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்த சீ.ஐ.டியினர் அது தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரைக் கட்டணம் செலுத்தும் விடுதியில் அனுமதிப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டைத் தனக்கு அறிவிக்குமாறு, சிரேஷ்ட அரச வழக்குரைஞரை, மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் பணித்தார்.

இதேவேளை, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்கவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்ற நீதவான் நிஷாந்த பீரிஸ், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

அத்துடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாரஹேன் பிட்டி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேராவையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

வசிம் தாஜுடீன், வாகனமொன்றில் இறந்து கிடந்த நிலையிலேயே, 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று நாரஹேன்பிட்டிய சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாடு முழுவதும் 1600 தபால் ஊழியர்கள் பற்றாக்குறை

நாடு முழுவதும் 1600 தபால் ஊழியர்கள் பற்றாக குறை நிலவுவதாக தபால் திணைக்களம்தெரிவித்துள்ளது.

தபால் ஊழியர்களின் பற்றாக்குறை யினால் தபால் பகிர்ந்தளிப்பதில் பாரிய சிக்கல் கடந்த காலங்களில் நிலவியதாக தபால் அதிபர் ரோஹண அபேவர்தன தெரிவித்தார்.

சிரேஷ்ட உத்தியோகத்தர்களை கடமை யில் இணைத்து கொள்வதற்கான பரீட்சை அண்மையில் நடைபெற்றதுடன் அந்தப் பரீட்சையில் சித்தியடைந்த 150 பேர் சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, 750 தபால் ஊழியர்களை கடமையில் இணைத்து கொள்ளவுள்ளதாகவும் 350 பேர் கடமையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் ரோஹண அபேவர்தன மேலும் தெரிவித்தார். (இ-7)

## பெண் பொலிஸாரின் பிரச்சினைகள் தொடர்பாக ஆணைக்குழு அவதானம்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் கடமை யாற்றும் பெண் பொலிஸாரின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு பொலிஸ் ஆணைக் குழு அவதானம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பொலிஸ் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாட வுள்ளதாகவும், பெண் பொலிஸாரின் உரிமைகள், பதவியுயர்வு, கொடுப்பனவுகள் என்பது தொடர்பிலும் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இதே வேளை, கடமையில் ஈடுபடும் பெண் பொலிஸார் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் , தளபாட காட்சி அறைக்கு
♦ Electrician- Rs.18000/= ♦ Show room Marketing Sales & Executives (Girls)- Rs.18000/= ♦ Show room Boys -Rs.18000/= ♦ Heavy Vehicle Drivers -Rs.25000/=
➢ 25 Days Work For Month. ➢ Time 9.00 AM - 8.00 P.M. ➢
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ், வேம்படிச் சந்தி அருகாமையில்
12,பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம்.
021 454 6699
(5693)

**அன்பு வாசகர்களே!**
**உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் அறிந்த
♦ செய்திகள்
♦ புகைப்படங்கள்
♦ நிகழ்வுகள்
♦ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
**076 636 3378**

Viber

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம<br>கி.பா:43செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/லண்டன் PR<br>தொ.இ: B/561 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 29<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1319 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 37செவ் 4 இல<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc, MSc லண்டன்<br>தொ.இ: B/3764 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 5<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்B.COM, M.COM/ ஆசிரியர<br>தொ.இ: G/1323 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/5732 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39சூரிசெவ் 12 இல<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/1358 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 04சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:MSc/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4124 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/1393 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 720 1005, 021 221 5434




**தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் 89 ஆவது பிறந்தநாள்**
**நினைவுப் பேருரையும் பரிசளிப்பும்**

இடம்:-யாழ்.பொதுசன நூலகக் கேட்போர் கூடம் காலம்:-27.08.2016 நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி (5729)

தலைமை :-கௌரவ .தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர், தலைவர்-தமிழீழ மக்கள் விடுதலை கழகம்)

பிரதம விருந்தினர்:- நீதியரசர், கௌரவ. சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் (முதலமைச்சர்-வடக்கு மாகாணசபை)

மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிக்கான பரிசளிப்பும் இடம்பெறும்

மூளாய்,சுழிபுரம். அமரரின் அபிமானிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர்
077 727 9238

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி மற்றும் பளை ஆகிய பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிய மூவருக்கு ஒரு இலட்சத்து முப்பத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிளிநொச்சிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு சென்ற ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த நபரையும் உழவு இயந்திரத்தையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பளைப்பகுதியில் அனுமதிப் பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற இரு டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் கைது செய்த பொலிஸார் குறித்த இருவரையும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அனுமதிப்பத்திரமின்றி மணல் கொண்டு சென்றவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் கொண்டு சென்றவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

கிளிநொச்சி பளைப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயில் வயல் இயக்கச்சிப்பகுதியில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பளைப்பகுதியில் மூவாயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து இருபத்து ஐயாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் 10 நாட்கள் சமூக சேவையிலும் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

கிளிநொச்சி, பளை ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயம் விற்பனை செய்த இரண்டு பேருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தினை விற்பனை செய்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சீல் சாராயம் பியர் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் பளை மற்றும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மஞ்சள் கோட்டுக் கடவையில் பாதசாரிகள் கடக்கும் போது வாகனத்தை நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரமும் இரு வாரங்களுக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மஞ்சள் கோட்டில் பாதசாரிகள் கடந்து சென்று கொண்டிருந்த வேளை வாகனத்தை நிறுத்தாமல் சென்ற சாரதி ஒருவரை கைது செய்த பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரத்தை பதினான்கு நாட்கள் இடை நிறுத்தி வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-15)

# மன்னாகண்டல் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

## இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்று சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் ஆற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையிலும் அனுமதிப் பத்திரமின்றியும் மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளதோடு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரையும் கைது செய்துள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவுமாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு மன்னாகண்டல் ஆற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முல்லைத் தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரின் தேடுதலின் போதே இவை சிக்கியுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடைய உழவுஇயந்திரங்கள்இரண்டும் சந்தேக நபர்கள் நால்வரும் மேலதிக விசாரணைகளுக்காகவும் விசாரணையின் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளிற்காகவும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# மாவீரர்களுக்கு வடக்கு, கிழக்கில் தூபிகளை ஏன் அமைக்க முடியாது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன் கேள்வி

(குருமன்காடு)

மனங்களில் கோவில் கட்டி வணங்கும் மாவீரர்களுக்கு ஏன் வடக்கு கிழக்கில் தூபிகளை அமைக்க முடியாது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் புத்த சிலைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கு கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கில் சிங்கள பௌத்தர்களை மேற்கோள் காட்டி பௌத்த மதத்தின் ஆக்கிரமிப்பு சின்னமாக புத்த சிலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டு தமிழ் மக்கள் புத்த பகவானுக்கு எதிரானவர்கள் அல்ல. அவரது போதனைகள் சிறப்பானது. அவரும்இந்து மதத்தை பின்பற்றிய ஒருவராக இருந்துள்ளார். இன்றும் பௌத்தர்கள் இந்து கடவுள்களை வணங்கி வருகின்றனர்.

எனவே மதம் சார்ந்து எந்த முரண்பாடுகளும் இல்லாத இந் நாட்டில் இன்று சில பேரினவாதிகள் மக்கள் மத்தியில் மதவாதத்தை தூண்டும் விதமாக செயற்படுகின்றனர்.

புத்தபெருமானை வணக்கத்திற்குரிய கடவுளாக அன்றி வடக்கு கிழக்கில் ஆக்கிரமிப்பு சின்னங்களாக மக்கள் மத்தியில் தோற்றுவிக்கின்றனர்.

இதனை பேரினவாதிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும். இந் நிலையில் ரஞ்சன் ராமநாயக்க மேற்கண்டவாறு தனது சிங்கள மேலாதிக்க எண்ணத்துடன் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

அவர் இவ்வாறு தெரிவித்துள்ள கருத்துக்கும் வடக்கு மாகாண முதலமைச்சரை அவதூறாக தெரிவித்துள்ள கருத்துக்கும் பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டும். இல்லையேல் அவரது இவ்வாறான செயற்பாடு தமிழர்களை எரிச்சலூட்டச் செய்வதாக உள்ளது.

பௌத்தர்களே இல்லாத இடங்களில் புத்த விகாரைகளை அமைக்க முடியுமாயின் தமிழர்கள் தங்களின் மனங்களில் கோவில் கட்டி வணங்கும் மாவீரர்களுக்கு ஏன் வடக்கு கிழக்கில் தூபிகளை அமைக்க முடியாது. எனவே தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுமாயின் தமிழ் மக்களின் மனங்களில் உள்ள ஆதங்கத்தின் வெளிப்பாடாக மாவீரர் நினைவுத் தூபிகள் உருப்பெறவாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பளைப்பகுதியில் டிமோ பட்டா வாகனத்தில் விறகு எடுத்துச் சென்றவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் டிமோ பட்டா வாகனம் ஒன்றில் அனுமதிப்பத்திரமின்றி விறகு எடுத்துச் சென்ற ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

கிளிநொச்சி பளைப் பகுதியில் மது போதைகளில் வாகனம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஒருவார காலத்திற்கு சமூக சேவையில் ஈடுபடுமாறும் சாரதியனுமதிப்பத்திரம் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற நபரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பளைப்பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஒரு வார காலம் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமூக சேவையில் ஈடுபடுமாறும் சாரதியனுமதிப்பத்திரத்தினை இரண்டு வாரகாலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை மது போதையில் பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜயர்படுத்தியதையடுத்து குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தர விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

கிளிநொச்சி ஏ-9 வீதியில் ஒலியெழுப்ப் தடை செய்யப்பட்ட பகுதியான நீதிமன்றம் முன்பாக ஒலியெழுப்பியவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் ஒலியெழுப்ப தடை செய்யப்பட்ட பகுதியான கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஒலியெழுப்பிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்து வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-15)

# பற்றைகளால் சூழ்ந்து காணப்படும் காணிகளினுள் கலாசாரச் சீர்கேடு



(சோலைநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் குடியில்லாத நிலையில் கடந்த 10 வருட கால மாக திருத்தம் செய்யப்படாமல் காணப்படும் வீடுகள், பல ஆண்டு காலமாக துப்புரவு செய்யப்படாமல் பற்றைகளால் சூழ்ந்துள்ள 5 காணிகள் போன்றவற்றில் தினமும் இரவு வேளைகளில் கலாசார சீர்கேடுகள் நடைபெறுவதாக இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான துப்புரவு செய்யப்படாத காணிகள், வீடுகளில் வெற்றுச் சாராயப் போத்தல்கள் உள்ளதுடன், கலாசார சீர்கேடுகளை உண்டாக்கும் பல தடயப் பொருட்களும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இப் பகுதிகளில் களவுகள் , கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் பல முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட வர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-309)

## கிளிநொச்சியில் காணிப்பிணக்குகள் தொடர்பில் வட.மா.ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிப்பிரச்சினைகள். காணிப்பயன்பாடுகள் மற்றும் மீள்குடியேற்றத்தின் தாமதங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற காணிப்பிணக்குகள் மற்றும் அரசகாணிகள்.வன இலாகாவிற்குச் சொந்தமான காணிகள் .ஏனைய திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள்.அரசால் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாகவும் மீள் குடியேற்றம் செய்யப்படாத பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாகவும் அதற்கான தாமதங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் , வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, மாகாண காணி ஆணையாளர், பிரதேச காணி உத்தியோகத்தர்கள், கரைச்சி,கண்டாவளை, பச்சிலைப் பள்ளி,பூநகரி ஆகிய பிரதேச செயலாளர்கள், வனவளத்திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். கலந்துரையாடலின் இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற காணிப் பிணக்குகள் தொடர்பாகவும் பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன் உரிய அதிகாரிகளுடாக தீர்வுகளைப்பெற்றுக் கொடுப்பதற்கும் கொடுக்குமாறும் காணியற்றவர்களுக்கு காணிகளை வழங்குவதுதொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சியில் இது வரையிலும் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் கவனத்திற்கு பொதுமக்கள் பலதடவைகள் கொண்டு சென்றதனை அடுத்தே இக் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-312-15)

## கப்பாச்சி கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு குடிநீரை பணம் செலுத்தி பெறுகின்றோம்



வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கப்பாச்சி கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், இக்கிராமத்தில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 1994 ஆம் ஆண்டு மீள் குடியேறியவர்களாவர்.

இங்கு 90 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வரும் நிலையில் எமது நீர்த் தேவைக்காக 8 குழாய் கிணறுகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ள போதும் அதில் இரண்டு குழாய் கிணற்று நீரை மட்டுமே குடிப்பதற்கு பயன்படுத்த முடிகிறது. அவை ஒவ்வொன்றில் இருந்தும் கோடை காலத்தில் ஒரு நாளைக்கு 10 குடங்களுக்கு மேல் தண்ணீரை பெற முடிவதில்லை. 10 குடங்கள் தண்ணீர் எடுத்து விட்டால் நீர் வற்றி விடும்.

சில குழாய் கிணறுகளை அடித்தால் நீருக்கு பதிலாக காற்றுத் தான் வருகிறது. குழாய் கிணற்றில் இருந்து வருகின்ற நீரில் ஒரு வகை மணம் வீசுவதுடன், நீருடன் மினுங்கல் தன்மையும் சேர்ந்து வருகிறது.

இதனால் இந்நீரை பரிசோதித்து குடிக்க வேண்டாம் என கூறிவிட்டார்கள். இது தவிர, 5 கிணறுகளும் இருக்கின்றது. அவற்றை குளிக்க மட்டுமே பயன்படுத்த முடிகின்றது.

இங்குள்ள நீரில் கல்சியம் மற்றும் வேறு இரசாயனம் கலந்துள்ளமையால் பலருக்கும் சிறுநீரகப் பிரச்சினை சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் சிறுபிள்ளைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை இந்த நீரை குடிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

நாளாந்தம் கூலி வேலைக்கு சென்று அதில் கிடைக்கும் சொற்ப பணத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பல மைல் தூரத்திற்குச் சென்று பணம் கொடுத்து பெற்று வந்து பயன்படுத்த வேண்டிய நிலையிலேயே தாம் இருப்பதாகவும் தெரிவித்துள்ள அம் மக்கள் தமக்கு சுத்திகரிக்கப்பட் குடிநீரை வழங்க சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் இம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-250)




## 94 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் கிணறுகளுக்கான வேலைகள் ஆரம்பம்

மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதார நல உதவித்திட்டத்தின் ஒரு பகுதியான விவசாயிகளுக்கு கிணறுகள் அமைப்பதற்கு உதவும் திட்டத்தினூடாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் மொத்தம் 94 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 53 புதிய கிணறுகளும் 41 கிணறுகள் திருத்தம் செய்வதற்கு மொத்தம் 94 கிணறுகளுக்குரிய பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வேலைகள் நடைபெற்று வருவதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தில் பயன் பெற்றுள்ள விவசாயிகளில் முதலில் கிணறு வேலைகளை முடித்த விவசாயி ஒருவருக்கு கிணறு கையளிக்கும் நிகழ்வு பேராறு கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு கிணற்றை விவசாயிடம் கையளித்தார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்,முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளர்,முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர்கள் மற்றும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்ததாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)



வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னனும் தேசிய மாவீரனுமான பண்டார வன்னியனின் 213 ஆவது நினைவு தினம் நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா மாவட்ட செயலக வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது. முல்லைத்தீவில் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட கோட்டையை தகர்த்து வெற்றி கொண்ட நாளின் 213 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வை பண்டாரவன்னியன் நற்பணி மன்றமும் வவுனியா நகர சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் கா. உதயராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன் சிரேஷ்ட சட்டத்தரணி சிற்றம்பலம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

## வன்னேரிக்குளம் கிராமத்தில் சுற்றுலா மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் நாயகம் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வன்னேரிக்குளம் கிராமத்தில் சுற்றுலா மையமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுற்றுலாத்துறை அபிவிருத்தி, கிறிஸ்தவ மத விவகாரங்கள் மற்றும் காணி அமைச்சர் ஜோன் ஏ. ஈ. அமரதுங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் வலியுறுத்தியுள்ள செயலாளர் நாயகம், இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வன்னேரிக்குளமானது கிளிநொச்சி நகரிலிருந்து 24 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக் கிராமம் இயற்கை வளங்கள் நிறைந்த கிராமமாகும்.

பலவகையான பறவைகள், யானைகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் மற்றும்பலவகை மரங்கள் உள்ள இயற்கைக் காடுகள், அழகிய குளக்கரை என்பன அமைந்த கிராமமாக காணப்படுகின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து இக் கிராமத்தில் சுற்றுலா மையமொன்றை அமைப்பதற்கென 06 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தும், காணி இனங்காணப்படாமை காரணமாக அந்த நிதி திரும்பிச் சென்றுவிட்டது.

இந்த கிராமத்தில் சுற்றுலாத்துறை மையமொன்றை அமைத்தால் அது சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவரக்கூடியதாக அமையும். அத்துடன், இதனூடாக அக் கிராம மக்களின் பொருளாதார நிலையை மேலும் அதிகரிக்கவும், அதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கவும் முடியும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## 804 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மரக்கறி விதைகள், பழமரக்கன்றுகள் வழங்கல்

### ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு



ஜனாதிபதியின் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட பெண்கள் விவசாய அமைப்புக்களிலிருந்து 804 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு மானிய அடிப்படையில் 6 விதமான மரக்கறிப் பயிர்களின் விதைகள் 4 விதமான பழ மரக்கன்றுகள் என்பன வழங்கப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஒட்டுசுட்டான்கமநல சேவை நிலையத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு 209 பயனாளிகளுக்கு மரக்கறி பயிர்களின் விதைகளின் பொதிகள் ,பழ மரக்கன்றுகள் என்பவற்றை வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வின் போது முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்,முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் பிரதேசசெயலக திட்டமிடல் பணிப்பாளர், ஒட்டுசுட்டான்கமநலசேவைநிலைய விவசாய போதனா சிரியர்கள் மற்றும் ஒட்டுசுட் டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-15)

# நல்லூரில் இன்று சூரியோற்சவம்



சூரியன் காசிபமுனி வரின் புத்திரராவார். இவரது மனைவி பெயர் சமுஞ்சா. இவருக்கு நிழல் மனைவியும் உண்டு. அவரின் பெயர் சாயா தேவி. இவருடைய பிள்ளைகள் இயமன், வசுதன், யமுனை, சர்வானி, சனி, தபதி, பியட்டி என்போராவார்.

அறுவகைச் சமயங்களுக்குள்ளே சௌரம் ஆறாவது இடத்தை வகிக்கின்றது. சௌரத்தில் சூரியபகவான் முழு முதற்கடவுளாக உள்ளான். எதிலிருந்து பிரபஞ்சங்கள் தோன்றுகின்றனவோ, அவை எவற்றில் வாழ்கின்றனவோ, எவற்றில் மறுபடியும் லயமடைகின்றனவோ அதுவே "பிரமம்" என பிரம்மசூத்திரம் கூறுகின்றது. சௌர மதத்தில் சூரிய பகவானையே மேற்கூறிய பிரமமாகக் கூறப்படுகின்றது.

வேதகாலத்திலே சூரிய வழிபாடு இருந்துள்ளது. அறுவகைச் சூரிய வழிப்பாடு இருந்ததாக "ஆனத்தகிரி" குறிப்பிடுகின்றார். இவ் ஆறு வகையினரும் காலைச் சூரியனையும் மதியச் சூரியனையும் மாலைச் சூரியனையும் மூன்றையும் மும்மூர்த்திகளாகவும் சூரியனை மனித வடிவிலும் சூரிய அடையாளத்தை உடலில் சூட்டுக்குறிகளை இட்டும் வழிபாடு புரிந்தனர்.

இவர்கள் அனைவரும் செந்திலகமணி, சிவப்பு மாலை அணிவதிலும் எட்டு அசைவுள்ள மந்திரத்தை உச்சரிப்பதும் வழிபாட்டு முறையாகும்.

சூரியனைப் பற்றி வியாச முனிவர் பிரமபுராணத்தில் 3899 செய்யுள்களையுடைய உப புராணமாக சௌரபுராணம் இயற்றியுள்ளார். காயத்ரீ மந்திரம் சூரியனைக் குறித்தே சொல்லப்பட்டு இருக்கின்றது. இதனைச் செபித்தால் சூரிய பகவானின் அருள் கிட்டும். சூரியனைச் சௌரமதம் அல்லாத ஏனைய சைவர்கள் கூட வழிபடுகின்றனர் என்பதற்குத் தைப்பொங்கல் வழிபாடே சான்றாகும். இன்று அனைத்து மதத்தினரும் இப்பொங்கல் வழி பாட்டை மேற்கொள்கின்றனர்.

சைவ மதத்தைச் சேர்ந்தவர்களும் சிவனைச் சூரியனாக வழிபட்டிருக்கின்றார்கள் என்பதை அப்பர்தேவாரம்வாயிலாக அறியலாம். சூரிய உபநிடதத்தில் " இவனே பிரமம்" எனக் கூறப்பட்டிருக் கின்றது. சூரிய பகவானுக்கு ஆதித்தன், மாத்தாண்டன், பாஸ்கரன், லோகாயன், லோகப்பிரகாசன், லோக தாட் சண்யன், ரவி என நாமங்கள்பல உள்ளன. சூரியபுராணம், சூரியதந்திரம், சூரிய ஆகமம் என்னும் நூல்களும் சூரியனுக்குரிய வழிபாட்டு முறைகளைக் கூறுகின்றது.

மகாபாரதத்தில் கர்ணன் சூரியனுடைய மகனாகப் பிறந்ததும் தருமர் சூரியனை வழிபட்டு அட்சய பாத்திரம் பெற்றதும் இதிகாசத்தில் சூரியனை வழிபட்டதற்குச் சான்றாகும். வேதகால மக்களால் சூரியன் விண்ணுலகக் கடவுளாகக் கொள்ளப்பட்டான். இந்தியாவில் ஒடிசா, மைசூர் போன்ற இடங்களில் சூரியனுக்குத் தனிக்கோயில்கள் உண்டென்பதனையும் அறிய முடிகின்றது. சூரியனை வணங்கினால் ஏற்படும் பலன்கள் பற்றி நோக்குமிடத்து,

ஜயதுஜயதுசூரியம் ஸப்த லோகைகதீபம்

கிரணசமிதபாபம் க்லேச துக்கஸ்யநாசம்

அருணநிகமகம்யம் சாதிமாதித்யமூர்த்தீம்

ஸகலபுவனந்தியம்பாஸ்க்கரம் தம் நமாமீ

சூரியனை வணங்குவதனால் அகமும் புறமும் ஒரே மாதிரி பிரகாசமடைகிறது. உலகம் முழுவதிற்கும் ஒரே தீபமாக விளங்கக்கூடிய சூரியன் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் வழங்குகின்றான். அதுபோலவே நமது மனதிற்குள்ளும் வெளிச்சத்தைப் பரப்புகிறது. தினமும் சூரியனை வணங்கினால் அறியாமை நீங்கி ஞானம் வளரும். நமது மனம் ஞானப்பிரகாசமாகும்.

இவ்வாறு செய்யும் போது படிப்படியாக அறிவு உண்டாகின்றது. அதிகாலைச் சூரியனின் கிரகணங்கள் உடலில் படும்போது உடலுக்கு புத்துணர்வும் சக்தியும் செயல் திறனும் கிடைக்கின்றது.

சூரியஒளிக்கு கிருமிகளை அழிப்பதற்கான சக்தி உள்ளது. தாவரங்கள் சிறப்பாக வளர்வதும் உயிரினங்களுக்கு ஏற்ற வகையில் இயற்கை வளங்களை மாற்றுவதும் சூரிய வெளிச்சம்தான்.

அந்தணர்கள் சூரியனை வணங்குவதற்கென தனி விதிகள் உள்ளன. அவர்கள் சூரியனை பிரம்மாவாக கற்பனை செய்து வணங்குகிறார்கள். தியானத்தின் மூலமாகவும் நமஸ்காரத்தின் மூலமாகவும் மற்றபிறமுறைகளிலும் அனைவரும் சூரியனை வணங்குவதால் அமைதி காக்கப்படுகிறது. அதனால் சூரிய நமஸ்காரம் அனைவருக்கும் ஏற்றதாகும். அது வெறும் ஆசாரம் மட்டுமல்ல, ஞான மார்க்கமும் முக்தி மார்க்கமும் ஆகும் என்பதனையும் உணரமுடிகின்றது.

சூரிய நமஸ்காரம்

சூரியன் நாம் காணும் தெய்வமாகும். பிரபஞ்சம் உருவான நாள்முதல் தேவர்கள் முதல் அனைவரும் சூரியனை வணங்குகிறார்கள். நமது பண்டைக்கால ஏடுகளில் அதற்கு ஆதாரங்கள் உள்ளன.

ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் முதலான தேவர்களும் அசுரர்களும் சூரிய நமஸ்காரம் செய்தார்கள்என்றுகூறுவதுண்டு. ஆதி மனு தொடங்கி பரம்பரை பரம்பரையாக சூரியனை வணங்குகிறார்கள். பூஜை செய்கிறார்கள். ஆதி மனுவின் காலத்தில்தான் மனி தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்களுக்கான விதி முறைகளும் சட்டங்களும் உருவாயின.

சூரிய வெப்பம் தான் பூமியிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் உணர்வையும் புத்துணர்ச்சியையும் வழங்குகிறது. புற உலகிற்கும் அக உலகிற்கும் வெளிச்சத்தை அளிப்பது சூரியன்தான். முதல் தரிசனத்தில் புறக்கண்ணால் உலகத்தை அறிகிறோம். அகக் கண்ணால் ஞானம் பெறுகிறோம். மனிதகுல வளர்ச்சிக்கு சூரிய வெளிச்சம் அவசியமாகும்.

நின்று கொண்டும் அமர்ந்து கொண்டும் ஒரு காலில் நின்று கொண்டும் சாஷ்டாங்கமாக தரையில் வீழ்ந்தும் சூரியனை வணங்குவது சிறப்பாகும். ஆண்களுக்குத்தான் இந்தவிதிமிகப் பொருத்தமானது. பெண்கள் நின்று கொண்டு சூரியனை நோக்கி தலைகுனிந்து வணங்குகிறார்கள். இந்தவிதமாக வணங்குதல் முறையால் தேகப் பயிற்சி செய்வதன் பலனும் கிடைக்கிறது.

குழந்தைச் செல்வம் இல்லாதவர்களும் ஜாதகத்தில் சூரிய கிரக தோஷமுள்ளவர்களும் ஐப்பசி மாதம் பிறந்தவர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்கலாம். எல்லோரும் ஆவணி மாதம் சூரியனைக் குறித்து விரதம் இருப்பதற்குச் சிறப்பான மாதம் ஆகும். ஆவணி மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அனுஷ்டித்துக் கடைசி ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு நிவேதனமாகப் பொங்கல் வைத்து விரதம் இருப்பார்களேயானால் மன மாசற்ற தன்மை உண்டாகும்.

சூரிய தோத்திரங்கள்

திருச்சிற்றம்பலம்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்

ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி

சூரியா போற்றி, சுதந்திரா போற்றி

வீரியா போற்றி, வினைகள் களைவாய்

காசினியிருளை நீக்கும் கதிர்ஒளி ஆக எங்கும்

பூசனை உலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்

வாசி ஏழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த

தேசிகா எனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி!

திருச்சிற்றம்பலம்

சூரியனுக்குரிய சிறப்புக்கள்

திக்கு-கிழக்குப்பார்வை, நிறம்-சிவப்பு, மலர்-செந்தாமரை, அணியவேண்டிய இரத்தினம்-மாணிக்கம், மிகவும் சிறப்பான நைவேத்தியம்-கோதுமை, சக்கரைப் பொங்கல் இவற்றோடு ஞாயிற்றுக்கிழமை விரதம் இருந்து சூரிய ஸ்தோத்திரங்களைச் சொன்னால் சூரியனின் சிறப்பான திருவருளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆலயங்களுக்குச் சென்று நவக்கிரக வழிபாடும் சிவ வழிபாடும் செய்கின்ற பொழுதுசிறப்பானவாழ்க்கையை மங்களகரமாக வாழ்ந்து இன்புறலாம். இவற்றைக் கருத்தில் கொண்டு இன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் உற்சவம் எல்லோருக்கும் மனஅமைதியையும் உண்மைப்பொருள் உணர்வையும் ஒருவர் மீது ஒருவர் காழ்புணர்வு கொள்ளாமையையும் மேற்கொள்ள வழிகாட்ட நல்லூர்க்கந்தன் திருவருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

ஈழவூர் சைவப்புலவர்

# சந்நிதியான் மஹோற்சவம் முதலாம் திகதி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-3)


துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்குக் கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் இருந்து வியாழக்கிழமை வரை (28,29,30,31,01) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

❖செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30-12.30 மணிவரை

மாலை 5.30-6.30 மணிவரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.

தொடர்பு: 021 221 9127,077 801 2226.

(5569)


# அபூர்வ திறமையைக் கொண்டுள்ள சிறுமி!



காலி வந்துரம்ப -பன்வில பிரதேசத்தை சேர்ந்த 7 வயது சிறுமி அபூர்வ திறமையொன்றை தன்னகத்தே கொண்டுள்ளார். காலி - வந்துரம்ப மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் ரங்க மினி யசஸ்தி என்ற இவர் எவ்வித துணையும் இன்றி சுவரில் ஏறும் திறமையை கொண்டுள்ளார்.

7 வயதுடைய இந்த சிறுமிக்கு இரண்டு தங்கைகள் உள்ளதாகவும் சிறு வயது முதல் இந்த திறமை காணப்படுவதாக அவரின் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது கராத்தே விளையாட்டில் இணைந்துள்ள அவரின் உடல் மிகவும் நெகிழ்வுத் தன்மையை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமைச்சர் ஜோன் கெரி இந்தியாவுக்கு விஜயம்

டில்லியில் நடைபெறவுள்ள இந்தியா-அமெரிக்கா இடையிலான செயற்றிட்டம் மற்றும் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி எதிர்வரும் 2 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முன்னதாக, பங்களாதேஷத்துக்கு செல்லும் அவர் அந்நாட்டின் தலைநகர் டாக்காவில் அமெரிக்கா - பங்களாதேஷம் நாடுகளுக்கு இடையிலான பல்வேறு விவகாரங்கள் குறித்தும் பங்களாதேஷத்தின் வளர்ச்சி தொடர்பாகவும் ஆலோசனை நடத்தவுள்ளார். (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.தி.இராசநாயகம்



மகாதேவா சிறுவர் இல்லத்தலைவரும் முன்னைநாள் கிளிநொச்சி அரசாங்க அதிபரும் முன்னாள் காந்தி நிலையத் தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும் உயர்ந்த ஆன்மீகவாதியுமான உயர்திரு. தி.இராசநாயகம் ஐயா அவர்களுக்கு யாழ். மாநகர சபையினர் 2016 ஆம் ஆண்டிற்குரிய யாழ். விருதினை வழங்கி கௌரவித்தமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு இன்னும் பல விருதுகளைப் பெற்றும் பல்லாண்டு காலம் நலமாக வாழ இறை ஆசியை வேண்டி வழிபடுகின்றோம்

வாழ்த்துவோர்:
தலைவர், பணியாளர், இல்லச்சிறுவர்கள்,
காந்தி இல்லம், உருத்திரபுரம்.

(சி-5546)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" இன்றும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை வி.விஸ்ணுயன் "அருணகிரிநாதர் வாக்கும் வாழ்வும்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க்கந்த சுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை "கந்தசஷ்டி கவசம் விளக்க உரை" பற்றி தென்னிந்திய ஆன்மீக பேச்சாளர் எஸ். என். பால சுப்பிரமணியம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறிவிழா இன்றும் பி.ப.3மணி தொடக்கம் மாலை 6மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரைச்சி பிரதேச செயலாளர் கே.நகேஸ்வரன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் "தெய்வீக இசைச்சங்கமத்தில்" இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் சிவன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை மாலை இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு


யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை வயலின்-கி.பத்மநாதன், ப.சியாம் கிருஷ்ணா, செல்வி-ப.காயத்திரி, மிருதங்கம்-ந.நந்தகுமார், தபேலா-பிரம்மஸ்ரீ வே.பிரபாகரசர்மா, கடம் -க.ரவி சங்கர் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'பாஞ்சாலி சபதம்'

நல்லூர்க்கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் "தெய்வீகத் தொடர் இசைப்பேருரை" நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ. சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று வெள்ளிக்கிழமை "பாஞ்சாலி சபதம்" பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் "ஆன்மீக அருளுரைகள்" (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும். இந்நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா "ஞானி அஞ்ஞானியை குழப்பமாட்டான்" எனும் தலைப்பில் அருளுரை வழங்குவார். (இ-3)



நல்லூர்க்கந்த சுவாமி மஹோற்சவத்தின் இரண்டாம் நாள் பகல் உற்சவத்தில் சின்மயாமிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் நல்லூர் முன்றலில் மேற்கொண்ட தியானப் பயிற்சி, பஜனை நிகழ்வுகளின் போது...

## நயினை-நல்லூர் திருத்தல பஜனைப் பாதயாத்திரை

நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழாவையொட்டி ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்ற நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நயினைதீவில் அபிஷேக பூசைகளுடன் மு.ப. 8 மணிக்கு ஆரம்பமாகும். எதிர்வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தை சென்றடையும். (இ-3)

## சக்கராழ்வார் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா

வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் (கோப்பாய் கிருஷ்ணன் கோவில்) பூங்காவனத் திருவிழா நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள கலைமாமணி ராஜேஷ் வைத்தியாவின் வீணை இசைக்கச்சேரி மாலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

## சட்டவிரோத வர்த்தக நிலையங்களை அகற்றவும்


அநுராதபுரம் தூபராம விஹாரைக்கு அருகில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையுடன் அகற்றுமாறு தொல்பொருளியல் திணைக்களம் அறிவித்துள்ளது. தூபராம விஹாரைக்கு அருகில் இவ்வாறு சட்டவிரோதமாக 40 வர்த்தக நிலையங்கள் இயங்கி வருவதாக தொல்பொருளியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை அகற்றுவதற்கு ஏற்கனவே அறிவித்தல் வழங்கியிருந்த போதும்



உரிமையாளர்கள் அகற்றவில்லையென திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## நல்லூரானுக்கு இன்று 19 ஆம் திருவிழா



## மயில் ரதமேறி காட்சி தா முருகா



வெற்றிவேல் முருகா
ஞானவேல் முருகா
கந்தவேல் முருகா
கதிர்வேற் முருகா
சின்னசின்னக் காவடி
சிங்காரக் காவடி
வண்ணவண்ணக் காவடி
வந்தாடும் காவடி
வள்ளி மணவாளனுக்கு
வண்ணமயில் காவடி ஆடிவர
தங்கவேலுடன் மயில் ரதமேறி
காட்சிதா முருகா!

-திருமதி பா.செல்வராணி
ஓய்வுபெற்ற நூலகர்,
வட்டுக்கோட்டை

இந்துமா சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்கைத்தீவினிலே
ஞாலம் புகழும் ஞானக் கந்தனாய் எழுந்தருளியவனே
பாரிலே தேறா துன்பம் துடைக்க உனையன்றி வேறுயாருளர்
புவியிலேயுனது செங்கோலாட்சியும் அரசும் எமக்கருள்வாய்
-நல்லூர் நாதன், சண்முகநாதன்

## ஆர்வலர் உன்போல் தெய்வம்...!

சீர்மிகு நல்லூர் வாழ் அறுமுகனே
கார் முகில் வண்ணன் திருமகனே
போர் தொடுத்து சூரனை வதைத்த புண்ணியனே
ஆர்வலர் உன்போல் தெய்வம் அகிலத்தே
-ம.தவமணி, திருநெல்வேலி.

**பல்லவி**

வரம் தருவாய் வள்ளி
தெய்வ நாயகனே..... (வரம்)

**அனுபல்லவி**

வேண்டும் வரமருளும் வேல்வடிவானவனே
யாண்டும் உருனைப்பாட வரமருள்வாய் (வரம்)

**சரணம்**

சிலைவடிவாய் நின்று சித்தி தருபவனே
கலைகளெல்லாம் தரும் கற்பக நாயகனே
பரமபத மருளும் சிவனார் திருமகனே
வரமருளும் பச்சை மாமயில் வாகனனே (வரம்)
ஸ்ரீமதி லலிதா சதாசிவசர்மா
மட்டுவில்.

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

உன்னையே நம்பியா னுருகியே பாடவே
ஓடிவருங் கருணைமழையே
என்னையுன் கருணையே யெவ்வா றியம்புவேன்
எல்லாமு முந்தன்களையே
அன்னையென வந்துநீ அலைமோது முள்ளமதில்
அமைதிதந் தாக்கவிழையே
நன்மையென வின்னொளியை நன்றினிது நல்குவாய்
நல்லூரின் கந்தவேளே!
*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

# இத்தாலியில் பயங்கர நிலநடுக்கம்; பலி எண்ணிக்கை 250 ஆக உயர்வு

(ரோம்)

**இத்தாலியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 250 ஆக உயர்ந்துள்ளது.**



இத்தாலி நாட்டின் மத்திய பகுதியை நேற்று முன்தினம் அதிகாலை 3.36 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இது ரிக்டர் அளவு கோலில் 6.2 புள்ளிகளாக பதிவானது. நில நடுக்கத்தை தொடர்ந்து 80 முறை அதிர்வுகள் ஏற்பட்டன.

இந்த நில நடுக்கத்தால் தலைநகர் ரோமிலும் கட்டடங்கள் குலுங்கின. இது 20 விநாடிகளுக்கு நீடித்தது. அமாட்ரைஸ் என்ற சிறிய நகரமே நில நடுக்கத்தில் சின்னாபின்னமானது.

உம்ப்ரியா, லாஜியோ, லி மார்ச்சி ஆகிய பகுதிகள் நில நடுக்கத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாகின. கட்டடங்கள் இடிந்து விழுந்து தரை மட்டமாகின. அர்குவாட்டா டெல் டிராண்டோ மேயர் அலான்ட்ரோ பெட்ருக்கி, "ஒரு கிராமமே இல்லாமல் போய் விட்டது. பெஸ்காரா டெல் டிராண்டோவில் உள்ள அனைத்து வீடுகளும் தரை மட்டமாகி விட்டன" என கண்ணீருடன் கூறினார். நில நடுக்கத்தால் 38 பேர் பலியாகி விட்டதாக முதல் கட்ட தகவல்கள் கூறின. மீட்பு பணியின் போது மேலும் சடலங்கள் மீட்கப்பட்டன.

250 பேர் பலியானதாக கடைசியாக கிடைத்த அரசு தகவல்கள் தெரிவித்து உள்ளன.

மீட்புப்படையினர் மீட்பு பணிகளில் முழு வீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். பல கிராமங்களில் வீதிகள் உருக்குலைந்து போனதால் மீட்புப் படையினர் சென்றடைவதற்கு சிரமப்பட்டதாக கூறப்படுகிறது. பல இடங்களில் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்புப்படையினர் வெறும் கைகளால் தோண்டி மீட்டதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். சுற்றுலா தலமான அக்குமோலியில் 2,500 பேர் நில நடுக்கத்தில் சிக்கி தவித்தனர். அமாட்ரைசில் இடிபாடுகளுக்கு இடையே மக்கள் சிக்கி இருக்கிறார்களா என்று தேடி கண்டறிய மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டன.




அக்குமோலியில் ஒரு தாயும், குழந்தையும் இடிபாட்டில் சிக்கி பரிதாபமாக ஓலமிட்டுக் கொண்டிருந்த போது இடிபாடுகளை வெறும் கைகளால் தோண்டி மீட்புப்படையினர் மீட்டனர். இடிபாடுகளில் சிக்கி படுகாயம் அடைந்தவர்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை தரப்படுகிறது. 368 பேர் காயம் அடைந்து உள்ளனர் என்றும் அதில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# வடகொரியாவின் அத்துமீறல்கள் குறித்து ஐ.நாவில் அவசர இரகசிய ஆலோசனை

(வோஷிங்டன்)

**வடகொரியா நேற்று முன்தினம் நடத்தியுள்ள ஏவுகணை பரிசோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் குற்றச்சாட்டை ஏற்று வடகொரியாவின் அத்துமீறல்கள் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசரமாக கூடி இரகசிய ஆலோசனை நடத்தி வருகிறது.**



கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இந்நிலையில், கடலுக்கு அடியில் நீர்மூழ்கி கப்பலில் இருந்து சக்திவாய்ந்த ஏவுகணையை வடகொரியா நேற்று முன்தினம் பரிசோதித்தது. இந்த அடாவடித்தனத்துக்கு தென்கொரியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டாக கண்டனம் தெரிவித்துள்ளன.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் ஜப்பான், தென்கொரியா, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. வடகொரியாவின் இந்த அத்துமீறலை ஒருபோதும் சகித்து கொள்ள முடியாது என இந்நாடுகளை சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனை அமெரிக்காவை ஆத்திரம் ஊட்டும் வகையில் அமைந்துள்ளதாக அந்நாட்டின் ராணுவ தலைமையகமான பென்டகன் எச்சரித்துள்ளது. வடகொரியாவின் இதுபோன்ற நடவடிக்கைகள் அந்நாட்டின் மீதான சர்வதேச தடைகளை அதிகரிக்கச் செய்யும் என குறிப்பிட்டுள்ள பென்டகன் செய்தி தொடர்பாளர் கேரி ராஸ், இவ்வகையிலான அச்சுறுத்தல்களில் இருந்து தங்களது நேசநாடுகளான வடகொரியா, ஜப்பான் ஆகியவற்றை பாதுகாப்பதுடன் தங்களையும் தற்காத்துக் கொள்ளும் திறன் அமெரிக்காவுக்கு இருப்பதாக ராஸ் தெரிவித்தார்.

இந்நிலையில், இப்படி தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டுவரும் வடகொரியா மீது மேலும் பொருளாதார தடைகளை விதிப்பதுடன், உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்என ஐக்கிய நாடுகள் சபையை ஜப்பான் மற்றும் அமெரிக்கா கேட்டுக் கொண்டது.

இதையடுத்து, நேற்று ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு சபையில் கூட்டம் அவசரமாக கூடியது.

வடகொரியா விவகாரம் தொடர்பாக மூடிய கதவுகளுக்கு உள்ளே இரக சிய ஆலோசனை கூட்டம் நடைபெற்றது என வோஷிங்டனில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)

## அமெரிக்க போர்க் கப்பல் மீது மோதவந்த ஈரான் கப்பல்கள்

### அரபி பெருங்கடல் பகுதியில் பதற்றம்

அரபி பெருங்கடல் பகுதியில் ஓமன் வளைகுடா மற்றும் பாரசீக வளைகுடாவுக்கு இடையில்உள்ள ஹோர்முஸ் ஓர்முசு நீரிணை பகுதி வழியாக சென்ற அமெரிக்க போர்க்கப்பல் மீது ஈரான் நாட்டின் கப்பற்படையை சேர்ந்த கப்பல்கள் படு வேகமாக மோதுவதுபோல் வந்த சம்பவத்தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான 'யூ.எஸ். எஸ். நிட்ஸே' என்ற போர்க்கப்பல் வந்த பாதை வழியே மிக வேகமாக வந்த ஈரான் நாட்டின் கப்பற்படையை சேர்ந்த



4 கப்பல்களில் இரு கப்பல்கள் 'யூ.எஸ்.எஸ்.நிட்ஸே' மீது மோதுவதுபோல் வந்த சம்பவத்தை மிக ஆபத்தானதாகவும், தொழில்முறை பாதுகாப்பை மீறிய அச்சுறுத்தலாகவும் கருதுவதாக அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் கண்டனம் தெரிவித்துள்ளது. (இ-7)

## பல்கலையில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

### மாணவர்கள் உட்பட 13 பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் காபூல் நகரில் கடந்த 2005ஆம் ஆண்டு அமெரிக்க பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதில், 1,700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். நேற்று முன்தினம் மாலை, மாலை நேர வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அப்போது, அங்கு பயங்கரவாதிகள் 'திடீர்' தாக்குதல் நடத்தினர். வெடிகுண்டுகளை வீசினர். துப்பாக்கியால் சுட்டனர். வகுப்பறைக்குள் இருந்த மாணவர்கள் வெளியேற முடியாமல் சிக்கித் தவித்தனர். தங்களை காப்பாற்றுமாறு 'டுவிட்டர்' மூலம் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கிடையே மாணவர்கள் அவசரகால கதவின் வழியாக வெளியேற தொடங்கினர்.

இருப்பினும் இந்த தாக்குதலில் ஒரு மாணவர் பலியானார். 14 பேர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று முதல்கட்ட தகவல்கள் வெளியாகின.

பல்கலைக்கழகத்திற்குள் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சிக்கிக் கொண்டதால் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக பல்கலைக்கழக வளாகத்தை பாதுகாப்புப் படை சூழ்ந்தது. பயங்கரவாதிகளை சுட்டு வீழ்த்தும் பணியை பாதுகாப்புப் படையினர் தொடங்கினர். இருதரப்பு இடையே சண்டை ஏற்பட்டது. சுமார் 10 மணி நேரங்களுக்கு மேலாக நீடித்த துப்பாக்கி சண்டை 2 பயங்கரவாதிகளுக்கும் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் முடிவுக்கு வந்தது. பாதுகாப்பு தாக்குதலுக்கு எந்த பயங்கரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. பயங்கரவாதிகள்நடத்திய இத்தாக்குதலில் 7 மாணவர்கள் உட்பட 13 பேர் பலியாகினர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 7 கோடி ரூபா செலவில் மெரீனா கடற்கரையில் பாய்மரப் படகு அகடமி-ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை மெரீனா கடற்கரையில் ரூபா 7 கோடி செலவில் பாய்மரப்படகு அகடமி அமைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா இன்று 110 ஆவது விதியின் கீழ் அறிக்கை படித்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது,

மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு விளையாட்டு ஒரு காரணியாக உள்ளதால், கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில், பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தல், பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல், மாவட்ட விளையாட்டு வளாகங்களை அமைத்தல், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையினை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயற்படுத்தி வருகிறது.

விளையாட்டு மேம்பாட்டிற்காக இந்த ஆண்டு செயற்படுத்தவுள்ள புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. எங்களது தேர்தல் அறிக்கையில் கடல் நீர் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும் என நாங்கள் தெரிவித்துள்ளோம்.அதனை செயற்படுத்தும் வகையில், உலகில் இரண்டாவது மிக நீண்ட கடற்கரையான மெரீனாவில் 'பாய்மரப் படகு அகடமி' ஒன்று நிறுவப்படும். மேலும், 'பாய்மரப் படகு மற்றும் துடுப்பு படகு போட்டிகளுக்கான திறன்மிகு பயிற்சி மையம்' ஒன்றும் ஏற்படுத்தப்படும். இந்த அகடமி மற்றும் திறன்மிகு பயிற்சி மையம் 7 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2. எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் பேராசிரியர்கள் விளையாட்டு தொடர்பான பயிற்சிகள், நுணுக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் பயன்பெற ஏதுவாக மின்நூலகம் ஒன்று 2 கோடியே 51 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்.

3. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படைக்கென தனியாக எந்தவிதமான பயிற்சி நிலையமும் இல்லை என்பதை கருத்தில் கொண்டு தேசிய மாணவர் படைக்கென தனியாக பயிற்சி அகடமி ஒன்று 12 கோடி ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று நான் பேரவையில் அறிவித்தபடி மதுரை இடையாபட்டியில் தேசிய மாணவர் பயிற்சி அகடமி அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன.

இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் தேசிய மாணவர் படை வீரர்கள் மலையேறும் பயிற்சியில் தங்களை செழுமைப் படுத்திக் கொள்ள ஏதுவாக மலையேறும் பயிற்சிக்கான செயற்கை மாதிரி வடிவமைப்பு ஒன்று 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.நா.அமர்வுகளுக்கு இணையாக காணாமற்போனோர் அலுவலகப்பணி

## பிரதியமைச்சர் பரணவிதான உறுதியளிப்பு

(கொழும்பு)

காணாமற் போனோரை தேடுவதற்காக அமைக்கப்படவுள்ள அலுவலகத்தின் நடவடிக்கை.ஐ.நா.மனித உரிமைகள் அமர்வுகளுக்கு இணையாக அமையும் எனவும் சிரேஷ்ட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இந்த அலுவலகம் அமையவுள்ளதாக பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.



பல கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகளைக் கொண்டதாக குறித்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த காணாமற்போனோர் அலுவலகத்துக்காக மனித உரிமைகள். சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை நிபுணர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடாளுமன்றில் மருமகனை காப்பாற்றினார் மாமனார்-கரு

(கொழும்பு)

அமைச்சர் நவின் திஸாநாயக்கவிடம். ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்கவிருந்த கேள்விக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய அனுமதி வழங்கவில்லை.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கேள்வி பதில் நேரத்தின் போது. தேயிலை சபைக்கும் நிதியமைச்சுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் தொட



ர்பில் சுனில் ஹந்துன்நெத்தி, நவின் திஸாநாயக்கவிடம் கேள்வி எழுப்பினார். இதன் போது உப கேள்விகளையும் அவர் தொடுத்தார்.

இந்தநிலையில் நவின் திஸாநாயக்க. நிதியமைச்சுடன் ஏற்பட்ட முறுகலால் பதவிவிலகப் போவதாக தெரிவித்த கருத்து தொடர்பில் உப கேள்வியை தொடுக்க. சபாநாயகர் கரு ஜெயசூரியவின் அனுமதியை கோரினார்.

எனினும் அது நேரடிக் கேள்வியுடன் தொடர்புபடவில்லை என்று கூறி சபாநாயக்கர் அதற்கு அனுமதி மறுத்தார்.

இதன்போது சபையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாமானார். மருமகனை காப்பாற்றி விட்டார் என்று நகைச்சுவையாக கூறியுள்ளார்.

எனினும் இதனை செவிமடுத்த சபாநாயகர் உறவு முறை பிரச்சினை நாடாளுமன்றத்தில் செல்லுபடியாகாது என்று தெரிவித்தார். (இ-7)

# கடத்தப்பட்ட பிரபல வர்த்தகர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து கடத்தப்பட்டு காணாமற் போனதாகக் கூறப்படும் பிரபல வர்த்தகர் மாவனெல்ல பிரதேசத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு. இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொரிஸார் தெரிவித்துள்ளனர். மாவனெல்ல பகுதியில் அடையாளம் காணமுடியாத இளைஞர் ஒருவரின் சடலம் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வர்த்தகரின் குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டதுடன். குற்றப் புலனாய்வு பொலிஸார் குடும்பத்தாருடன் மாவனெல்ல பிரதேசத்திற்கு சென்றுள்ளனர்.

பின்னர் இரவு 10 மணியளவில் அங்கு காணப்பட்ட சடலம் கடத்தப்பட்ட வர்த்தகருடையது என அவருடைய குடும்பத்தார் அடையாளம் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மாவனெல்ல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் கடத்தல் தொடர்பில் 7விசேட பொலிஸ் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வர்த்தக ரீதியான பகை காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றிருக்கலாம் என்ற கோணத்தில் தாம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

### ஆளுநரின் கருத்து பிழையானது

# வடமாகாண சபை எடுத்த தீர்மானம் அநீதியானது!

## விமலசார தேரர் புலம்பல்



வடக்கின் சில பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை அகற்றுவதற்கு வட மாகாண சபை எடுத்துள்ள தீர்மானம் அநீதியானது என வட, கிழக்கு மாகாணங்களுக்கான பிரதான மாநாயக்கர் சியம்பலகஸ்வெள விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கும், பௌத்த மாநாயக்க தேரர்களுக்கும் எழுத்து மூலம் அவர் அறிவித்துள்ளார்.

வடமாகாணசபையின் இந்த தீர்மானம் நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும் என அவர் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் அறிவித்துள்ளார்.

வடக்கில் 13 பௌத்த விஹாரைகள் காணப்படுவதாக வட மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்த கருத்து பிழையானது என விமலசார தேரர் தெரிவித்தார்.

பௌத்த மத விவகார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட 29 விஹாரைகள் வவுனியாவில் மட்டும் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாக விஹாரை. நாகதீபம் ஆகிய விஹாரைகளும். கிளிநொச்சி. முல்லைத்தீவு. மன்னார் ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பல பௌத்த விஹாரைகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நமக்கு யார் துணை?

சிலர் தெய்வமே துணை என்று இருக்கிறார்கள்.

சிலர் தன் கணவர் அல்லது தன் மனைவி அல்லது தன் பிள்ளைகள் அல்லது தன் பெற்றோர் துணை என்று இருக்கிறார்கள்.

கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் இது எப்படி ஓர் அடிப்படை இல்லாத நம்பிக்கை என்பது புரியும்.

தெய்வமே துணை என்று இருப்பவர்கள், எது எது எப்படியெப்படி நடக்கணுமோ , அது அது அப்படி அப்படி நடக்கத்தானே செய்யும்! என்று அடுத்த வீட்டுப் பெண் பட வசனம் மாதிரிப் பேசிக் கொண்டிருப்பாள். தெய்வத்தின் மீது பழியைப் போட்டு விட்டுச் சும்மா இருப்பவர்களைப் பிழைக்கத் தெரிந்தவர்கள் ரகத்தில் சேர்க்க முடியாது.

மனிதன் தெய்வத்தின் அருளோடு சுயமாகவும் செயற்பட்டுத் தனக்கு ஏற்படப் போகும் பாதகமான சூழ் நிலைகளைச் சாதகமான சூழ் நிலையாக ஆக்கிக் கொள்ள முடியும் என்பதே உண்மை.

நாம் யாரைத் துணையென்று பெரிதாக நம்பியிருக்கிறோமோ அவர்களே நமக்கு எதிராகத் திரும்பி விடுவதும் உண்டு. வேறு வகையில் சொல்லப் போனால் நாம் செய்யும் காரியங்களுக்காக நம்மைக் கண்டிக்கவும் - ஏன் தண்டிக்கவும் இவர்களுக்கே அதிக உரிமை இருக்கிறது.இதுவே நமக்கு எதிராக அவர்கள் திரும்பி விட்டதாக நமக்குப்படுகிறது.

சிலர் , ஆள்பலம், அதிகாரப் பலம் , பொலிஸ் பலம் ஆகியவை நமக்குத் துணையிருக்கும் போது நம்மை யார் என்ன செய்துவிட முடியும் என்ற நினைப்போடு விபரீதச் செயல்களில் இறங்கிவிட்டு அப்புறம் அவர்கள் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு தவிப்பதையும் நாம் பொது வாழ்வில் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

இது புலியைத் துணைக்கு வைத்துக் கொள்கிற கதையைப் போன்றது.

நமக்கு ஒரு நோய் என்றால் எப்படி அதன் விளைவுகள் மற்றவர்கள் அனுபவிக்க முடியாதோ அதைப் போன்று, நமக்கென்று சில தனிப்பட்ட துன்பங்கள் - இக்கட்டுக்கள் வரும் போது எவ்வளவு நெருங்கியவர்களும் அதற்குத் துணையிருக்க இயலாமல் போய்விடலாம்.

மற்றவர்கள் நமக்குத் துணையிருப்பது என்பது ஓர் எல்லைவரை தான். நமக்கு ஏதும் என்றால் ஆறுதல் சொல்வார்கள்; ஒத்தடம் தருவார்கள்; ஓரளவு உதவுவார்கள், ஆனால் அனுபவிக்க வேண்டியவர்கள் நாம் மட்டுமே!

நம்மை உயரே தூக்கி வைக்கவும் சரி, பாதாளத்திலிருந்து தூக்கி விடவும் சரி , பிறருடைய கைகள் ஓரளவுதான் எட்டும். அதற்கு மேல் அவர்களால் செய்ய முடியாது.

பத்து ஆண்களின் நடுவே ஒரு பெண் பணி புரிந்து கற்போடு திகழ்வதோடு, கண்ணியமான பெண் என்று பேரெடுக்கிறாள் என்று வைத்துக் கொள்வோம்.

அவளுக்குத் துணை அவளுடைய பண்புகளே தவிர வேறல்ல.

நம் பாதுகாப்பிற்கு யாரும் எப்போதும் துணை வருவார்கள்-உடனிருப்பார்கள் என எதிர் பார்க்க முடியாது. எப்போதும் நமக்கு உதவுபவை நம் பண்புகளும் நம் சமயோசித புத்தியும் திறமையும் மனபலமுமே.

கூட்டிக் கழித்துப் பார்த்தல் -

நமக்கு நாமே துணை !

**லேனா தமிழ்வாணன்**

# கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016

## பொதுஅறிவும் நுண்ணறிவும்

நேரம்:- 1.30 மணித்தியாலயம்

தொகுப்பு:-P.Kamalthasan B.A (Cey), MEd (Hons), M.A in Eco PGDE PGDM SPL Trd Com SLPS III

அறிவுறுத்தல்

கிராம அலுவலர் தரம் III ற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவும் நுண்ணறிவும் வினாத்தாள் 1 மணி 30 நிமிடத்தினை கொண்டது. ஆரம்பத்தில் 50 பொது அறிவு பல்தேர்வு வினாத்தாள்களையும் 25 நுண்ணறிவு வினாக்களையும் கொண்டமைந்திருந்தது. தற்போது 1 மணி 30 நிமிட வினாப்பத்திரமானது 30 பொது அறிவு வினாக்களையும் 30 நுண்ணறிவு வினாக்களையும் கொண்டு அமைகிறது என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்க வேண்டும்.

### பகுதி I

◆1 தொடக்கம் 20 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை புள்ளி கோட்டில் எழுதுக.

01) இலங்கையில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை சரியான கிட்டிய ஆயிரங்களில்
1. 15 000 2. 14 000 3. 13 000 4. 16 000

02) இந்த வருடத்தில் கைத்தொழில் நாடுகளின் G7 மாநாடு நடைபெற்றது
1. சுவிட்சர்லாந்து 2. ஜப்பான்
3. ஐக்கிய அமெரிக்கா 4. பிரான்ஸ்

03) இலங்கையில் பாலுற்பத்தியில் உதவுவதற்கு அண்மையில் முன்வந்துள்ள நாடு
1. இந்தியா 2. டென்மார்க்
3. அவுஸ்திரேலியா 4. நியூசிலாந்து

04) இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் முதன் முதலில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எந்த ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்றது.
1. 1956 2. 1960 3. 1965 4. 1970

05) பின்வருவோரில் எந்த வெளிநாட்டவரால் இந்த நாட்டுக்கு கோப்பிச் செய்கை அறிமுகம் செய்யப்பட்டது.
1.அராபியர் 2. போர்த்துக்கீசர் 3. ஒல்லாந்தர் 4. ஆங்கிலேயர்

06) இலங்கையில் மலேரியா நோய் ஒழிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார தாபனத்தால் வெளியிடப்பட்ட ஆண்டு
1. 2011 2. 2012 3. 2013 4. 2014

07) கபுக்கி மற்றும் நோ எனும் மரபு நாடக மரபுகள் உருவாகிய நாடு பின்வருவனவற்றுள் எது
1. சீனா 2. ஜப்பான் 3. வியட்நாம் 4. தென்கொரியா

08) ஞாயிற்றுத் தொகுதியில் மிகவும் குளிர்ச்சியான கோள் எது
1.செவ்வாய் 2.சனி 3.யுரேனஸ் 4.நெப்தியூன்

09) 21 ஆம் நூற்றாண்டில் மனித இனம் எதிர்கொள்ளும் முக்கிய பிரகடனம் எது
1.சர்வதேச பயங்கரவாதம் 2.அணுவாயுத உற்பத்தி
3.சூழல் மாசடைதல் 4.பூகோளம் வெப்பமடைதல்

10) தற்போது எல்நினோ (ELNINO) காலநிலையில் ஏற்பட்ட வரட்சி காரணமாக ஆறுகள் மணலாக மாறியுள்ள ஆபிரிக்க நாடு எது
1.சோமாலியா 2.சூடான் 3.எதியோப்பியா 4.நைஜீரியா

11) வான் பொருட்களை அவதானிப்பதற்கான தொலைநோக்கியை முதலில் கண்டு பிடித்தவர் யார்
1.கொப்பனிக்கஸ் 2.கலிலியோ
3.கெப்லர் 4.அரிஸ்ரோட்டில்

12) தற்போது உலகில் மிக அதிகளவில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகள் ஐந்தினை இறங்கு வரிசையில் கொண்ட விடை தொகுதி
1.சீனா, இந்தியா, கென்யா, இலங்கை, வியட்நாம்
2.சீனா, இலங்கை, இந்தியா, கென்யா, வியட்நாம்
3.சீனா, இந்தியா, இலங்கை, கென்யா, வியட்நாம்
4.சீனா, கென்யா, இந்தியா, இலங்கை, வியட்நாம்

13) பின்வருவனவற்றுள் கணனியை இணையத்துடன் இணைப்பதற்கு தேவையான முக்கிய சாதனம் எது
1.பென்ரைவ் 2.சுட்டி 3.தாய்பலகை 4.மொடம்

14)இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைக்கு ஏற்ப 2015 ஆம் ஆண்டில் தனி ஒரு நபரின் உட்கொள்ளும் கலோரிப் பெறுமதி யாது
1. 2111 2. 1222 3. 2125 4. 2525

15) இலங்கையானது குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு
1. 1956 2. 1965 3. 1972 4. 1978

16) இலங்கையில் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ்.சேனாநாயக்க அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பலநோக்குதிட்டம்
1. மின்னேரியா குடியேற்றத்திட்டம் 2.வடவளவைத்திட்டம்
3. கல்லோயா குடியேற்றம் 4. பதவிய குடியேற்ற திட்டம்

17) இலங்கையிலுள்ள ஐந்து நீர்வீழ்ச்சிகளை அவற்றின் உயரத்திற்கு ஏற்ப இறங்கு வரிசைப்படி சரியாக காட்டும் விடை யாது
1. பம்பரகந்தை, தியலும, லக்சபானா, கிரிந்தி, ஹந்தபான்
2.பம்பரகந்தை, லக்சபானா, தியலும, கிரிந்தி, ஹந்தபான்
3.பம்பரகந்தை, லக்சபானா, தியலும, ஹந்தபான்,கிரிந்தி
4.பம்பரகந்தை, தியலும, ஹந்தபான், லக்சபானா, கிரிந்தி

18) தற்போது மக்களாதரவை பெற்றுள்ள மனித அபிவிருத்தி சுட்டியை ஐக்கிய நாடுகளின் எந்த முகவர் இல்லம் முன் வைத்தது
1.UNDP 2.UNESCO 3.UNICEF 4.UNHCR

19)பின்வருவனவற்றுள் அதிகளவு கலோரிகளைக் கொண்ட பழம் எது
1.பப்பாளிப்பழம் 2.வாழைப்பழம்
3.கொடித்தோடை 4.ஆனைக்கொய்யா

20)தற்போது இலங்கையின் பெண், ஆண் சனத்தொகை சதவீதத்தை சரியான ஒழுங்கல் கொண்ட விடை யாது
1. 53.8, 46.2 2. 52.8, 47.2
3. 51.8, 48.2 4. 50.8, 49.2

◆21 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக

21) பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கையை எண்ணக்கருவாக முன்வைத்தவர்?

22) இலங்கையில் கிராம முறை கட்டுப்படுத்தும் அமைச்சு யாது?

23) அமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகளில் கிரிக்கெட் விளையாட்டில் முன்னிலையில் நிற்கும் நாடு யாது?

24) அண்மையில் எவரெஸ்ட் மலைச்சிகரத்தை அடைந்த இலங்கையரின் பெயர்?

25) உலகில் 11km மிக ஆழமான கடற்பகுதியை கொண்ட இடத்தின் பெயர் யாது?

26) 2015ஆம் ஆண்டில் உலகில் இலஞ்சம், மோசடி ஆகியன மிகக் குறைவான நாடு எது?

27) 2016ஆம் ஆண்டில் புவியின் மிக வேகமான மனிதர் எனப் பெயர் பெற்றவர் யார்?

28) இலங்கையின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது?

29) இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால கருத்து வேற்றுமைக்கு முக்கிய காரணம் யாது?

30)பேஸ்புக் (முகநூல்) அறிமுகம் செய்யப்பட்டது யாரினாலாகும்?

### பகுதி-II

◆31 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு சொற்கள் படி தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்கள் குறித்தவொரு இயல்புக்கு ஏற்ப ஒன்றிற்கொன்று சமமான தொடர்பை குறித்து நிற்கிறது. அவ்வாறான சமமான தொடர்பை காட்டாத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

31) 1.வேர்கள் 2.பூக்கள் 3.இலைகள் 4.காய்கள் (......)
32) 1.இரக்கம் 2.பொறாமை 3.கருணை 4.அன்பு (......)
33) 1.இரப்பை 2.இதயம் 3.சிறுகுடல் 4.பெருங்குடல் (......)
34) 1.இலாபம் 2.பெறுபேறு 3.வெற்றி 4. நிம்மதி (......)
35) 1.விபரித்தல் 2. கருத்துரைதல் 3. விளக்குதல் 4. பகுப்பாய்வு செய்தல் (......)

◆36 தொடக்கம் 40 வரையிலான ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைக் கண்டு பிடித்து அதனை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் இலக்கத்தில் எழுதுக.

36) மாணவன் ஒருவன் ஒவ்வொன்றும் ரூபா 22 வீதம் சில பேனாக்களையும் ஒவ் வொன்றும் ரூபா 14 வீதம் சில பென்சில்களையும் வாங்குவதற்கு ரூபா 136 செலவு செய்கிறான். அவன் வாங்கிய பேனைகளின் எண்ணிக்கை யாது?(...............)


37) ஒவ்வொருமாதமும் இரண்டாம் நான்காம் சனிக்கிழமைகளிலும் எல்லா ஞாயிற்று கிழமைகளிலும் விடுமுறை தினங்களானால் சனிக்கிழமையில் ஆரம்பமாகும் 30 நாட்கள் கொண்ட ஒரு மாதத்தில் விடுமுறை அல்லாத நாள்களின் எண்ணிக்கை யாது? (...............)

38)நிறுவனம் ஒன்றில் பயிற்றப்பட்ட தொழிலாளர் 36 பேர் இருந்தனர். பயிற்றப்படாத தொழிலாளர் 64% ஆகும். பயிற்றப்படாத ஆண் தொழிலாளர் எண்ணிக்கை 40 ஆகும். பயிற்றப்படாத பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது (...............)

39) குறித்த வேலை ஒன்றின் 1/4 பங்கினை முத்துக்குமார் செய்து முடிக்கிறார். எஞ்சிய வேறு சிலரால் சமமாக பகிர்ந்து செய்து முடிக்கப்படும் முத்துக்குமார் செய்த வேலைப்பங்கு ஏனைய ஒவ்வொருவரும் செய்த வேலைப்பங்கை விட மூன்று மடங்காகும். முத்துக் குமார் அடங்கலாக எத்தனை பேர் அந்த வேலையில் ஈடுபட்டனர்(...............)

40)விழா ஒன்றில் பங்குபற்றிய ஆண்களினதும் பெண்களினதும் எண்ணிக்கை 91 ஆகும். ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தும் சமமான எண்ணிக்கையிலான ஆண்களும் பெண்களும் அதில் பங்குபற்றியிருந்தனர். பங்குபற்றிய ஆண்களின் மொத்த எண்ணிக்கை 21 எனில் அந்த விழாவில் பங்கு பற்றிய பிரதேசங்களின் எண்ணிக்கை யாது? (...............)

◆41 தொடக்கம் 45 வரையான வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள உருவத்தை அடிப் படையாக கொண்டவை. இத்தகவலுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைக் கண்டு அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக



41) இந்த உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன.
1. 5 2. 6 3. 7 4. 8 (...............)

42)இந்த உருவில் எத்தனை செவ்வகங்கள் உள்ளன.
1. 2 2. 3 3. 4 4. 5 (...............)

43)இந்த உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன
1. 8 2. 9 3. 10 4. 12 (...............)

44) இந்த உருவில் முக்கோண சோடிகளின் மூலம் உருவாகும் சதுரங்கள் எத்தனை உள்ளன.
1. 5 2. 6 3. 7 4. 8 (...............)

45) இந்த உருவிலே சமமான இரு பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்படும் கேத்திர கணித உருவங்கள் எத்தனை இருக்கின்றது.
1. 6 2. 8 3. 10 4. 12 (...............)

◆46 தொடக்கம் 50 வரையான வினாக்கள் குறித்த ஆறு சபைகள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை

- A,B,C,D,E,F என்ற ஆறு சபைகளிடையே பிரதேச சபை இரண்டும், நகர சபை இரண்டும் உள்ளூராட்சி சபை இரண்டும் உள்ளன.
- அவற்றுள் A என்பது பிரதேச சபை அல்லாததோடு B யும் E யும் உள்ளூராட்சி சபை இல்லை. அவ்வாறே D என்பது நகர சபை அல்லாததோடு A யும் D யும் உள்ளூராட்சி சபை இல்லை
- மேலும் A யும் B யும் ஒரே சபைகள் இல்லை
- இந்த ஒவ்வொரு சபையும் பிரதேச, நகர, உள்ளூராட்சி போன்ற எந்தவொரு வகையொன்றிற்கு மட்டும் உரிய சபை ஆகும்.

16 ஆம் பக்கம் பார்க்க....

பொது அறிவும் நுண்ணறிவும் தொடர்ச்சி...,

இந்த தகவலுக்கு ஏற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கண்டு அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் புள்ளிக்கோட்டில் எழுதுக.

46) இந்த சபைகளுள் நகர சபை எவை

1.A, B 2.A,E 3.B,D 4.C,F

47) இவற்றுள் உள்ளூராட்சி சபையாக இராததும் எனினும் பிரதேச சபையாக அமைவது எது

1.B 2.C 3.E 4.F

48) இங்குள்ள உள்ளூராட்சி சபையாக அல்லாத நகர சபை அல்லாத இரு நகரம் எவை

1.A,B 2.B,D 3.C,F 4.D,E


49) C,F என்ற இரு சபைகளும் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள எந்தக் கூற்று உண்மையாகும்

1.C என்பது பிரதேச சபை ஆவதுடன் F உள்ளூராட்சி சபை
2.C என்பது உள்ளூராட்சி சபை ஆவதுடன் F பிரதேச சபை
3.C,F இரண்டும் உள்ளூராட்சி சபை
4.C,F ஆகிய இரண்டும் பிரதேச சபை

50)பிரதேச சபை, நகர் சபை மற்றும் உள்ளூராட்சி சபை போன்ற ஒவ்வொரு வகைக்கும் உரிய இரு சபைகளை அதற்கு எதிரே சரியாகக் காட்டுவது

1.பிரதேச சபை- B,D 2.நகர சபை-A,C
3.நகர சபை-B,E 4.உள்ளூராட்சி சபை -C,E

◆ 51 தொடக்கம் 53 வரையான வினாக்களுக்கு மும்மைத் தொடைகளில் அடங்கியுள்ள தொடர்பை இனங்கண்டு அந்தத் தொடைகளின் இயல்புக்கு பொருந்துகின்ற தொடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.




1. 2. 3. 4. 5.

51) பழங்கள், பெயர்ஸ், தானியங்கள் (..........)
52) நிறம், சிவப்பு, நீலம் (..........)
53) அமைச்சு, திணைக்களம், பிரதேச அலுவலகம் (..........)

◆54 தொடக்கம் 56 வரையிலான வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்தவொரு கோலத்திற்கேற்ப எண்கள் இடப்பட்ட உருவப்பட வரிசைகள் தரப்பட்டுள்ளன.


அந்த கோலத்திற்கு ஏற்ப ஒவ்வொரு உருவக் கோலத்திலும்? என்ற குறியீட்டுடன் கூடிய இடத்திற்கு இடக்கூடிய மிகப்பொருத்தமான எண்ணைக் கண்டு அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

54)





1. 10 2. 13 3. 17 4. 20

55)




1. 14 2. 17 3. 11 4. 9

56)




1. 1 2. 2 3. 3 4. 4

◆57 தொடக்கம் 58 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் குறித்தவொரு சாரிக் குவியலில் மஞ்சள், நீலம், ஊதா, சிவப்பு, வெள்ளை, பச்சை போன்ற ஒவ்வொரு நிறத்திலும் அமைந்த ஆறு சாரிகள் வைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை

- நீலநிற சாரி அல்லது ஊதா நிற சாரி காணப்படுவது சாரிக்குவியலின் ஆக மேலாகவோ அல்லது கீழாகவோ இல்லை
- மஞ்சள் நிறச் சாரிக்கு அருகில் கீழே காணப்படுவது பச்சை நிறச் சாரியாகும்
- ஊதா நிறச் சாரி காணப்படுவது மஞ்சள் நிறச்சாரிக்கு கீழேயாகும்
- மஞ்சள் நிறச் சாரிக்கு மேலே இருப்பது முறையே நீல நிறச் சாரி மற்றும் சிவப்பு நிறச் சாரிகள் மட்டுமேயாகும்

இந்தத் தகவலுக்கேற்ப கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

57) சாரிக்குவியலில் ஆக மேலே இருக்கும் சாரியினது நிறம் என்ன?

1.சிவப்பு 2.பச்சை 3.வெள்ளை 4.மஞ்சள்

58)சாரிக் குவியலில் ஆகக் கீழே இருக்கும் சாரியினது நிறம் என்ன?

1.சிவப்பு 2.வெள்ளை 3.மஞ்சள் 4.பச்சை

◆59,60 வினாக்கள் A,B,C,D,E,F என்ற ஆறு அலுவலர்களினது சிரேஷ்ட தன்மை மற்றும் அவர்களின் வயதுகள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை

- B,C என்போர் சிரேஷ்ட தன்மையில் F இனை விடக் குறைந்தவர்கள். அவ்வாறே A யை விட வயதில் கூடியவர்கள்
- B ஐ விட D என்பவர் வயதில் கூடியவர்கள்
- D ஐ விட E என்பவர் சிரேஷ்ட தன்மையில் குறைந்தவர்
- D ஐ விட F என்பவர் வயதில் கூடியவர்கள்
- E ஐ விட A என்பவர் சிரேஷ்ட தன்மையில் குறைந்தவர். எனினும் F இனை விட சிரேஷ்ட தன்மையில் கூடியவர்.

இத்தகவலுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு விளைவுக்குமான சரியான விடையை தெரிவு செய்க

59) சிரேஷ்ட தன்மையில் மிகக் கூடியவராக இருப்பவர் யார்?

1.A 2.C 3.D 4.E

60) A யினை விட சிரேஷ்ட தன்மையில் கீழே இருப்பவர்கள் யார்/ யாவர்?

1. F மட்டும் 2. B,C மட்டும்
3. B,F மட்டும் 4. B,C,F மட்டும்

◆◆◆

# இலங்கையில் பிரபலம் பெற்றவர்கள்

➢ஆதர் சீ கிளார்க்

இலங்கையில் வாழ்ந்து 2008 இல் காலமான புகழ்பெற்ற விஞ்ஞான புனை கதை எழுத்தாளரும் உலக தொடர்பாடலில் புரட்சியொன்று ஏற்பட இந்நாட்டில் வசித்த எதிர்வு கூறலியலாளர் ஆவார்.

➢றிஸானா நபீக்

2007ஆம் ஆண்டு தனது பராமரிப்பில் இருந்த பச்சிளம் குழந்தையை கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு சவுதி அரேபியா நீதிமன்றத்தின் கீழ் ஷரீ ஆ சட்டத்தின் கீழ் மரண தண்டனை தீர்ப்பு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

➢எஸ்.பி.சாள்ஸ்

ஓவியத்துறையில் ஈடுபாடுடைய இவர் பாராளுமன்றத்திலுள்ள செங்கோலை நிர்மாணித்ததுடன் 2006 இல் காலமானார்.

➢கலாநிதி சரத் டி.குணபால

அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிலையத்தில் கடமையாற்றும் இலங்கை விஞ்ஞானி ஆவார்.

➢டைட்டஸ் தொட்டவத்த

2011 ஒக்டோபரில் காலமான இலங்கையின் சிறந்த திரைப்பட இயக்குநரும் திரைக்கதை ஆசிரியரும் ஆவார்.

இவரது சிறந்த படைப்புக்கள் மால்குடி தபஸ, அதுருமிதுரு.

➢மஹிபால ஹேரத்

மகாத்மா காந்தி சமாதான விருதினை 2011 டிசெம்பரில் பெற்ற முதலாவது இலங்கையர்.

➢வேவல்தெனிய மேதா லங்கா தேரர்

1998 ஆம் ஆண்டு ராமன்ய மகாபீடத்தின் 12வது மகாநாயக்க தேரராக நியமிக்கப்பட்ட பின்னர் பௌத்தத்திற்காக 90 வருடங்கள் தனது வாழ்க்கையை அர்ப்பணித்து 2012 செப்டெம்பரில் காலமானார்.

➢C.R.D சில்வா

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுத்தலைவர் சித்ரா ரஞ்சன் டி சில்வா 2013 நவம்பரில் காலமானார்.

இவர் முன்னாள் சட்டமா அதிபராகவும் சொலிசிஸ்டர் ஜெனரலாகவும் பதவி வகித்தார்.

➢ஸ்ரீமத் அநாகரிக தர்மபால

இந்திய அரசினால் தபால் முத்திரை ஒன்று வெளியிடப்பட்டு நினைவு கூரப்பட்ட தலைவர்.

➢சேர்.பொன் இராமநாதன்

இலங்கை சுதந்திரத்தை பெறுவதற்கு உன்னத சேவையாற்றிய இலங்கை தமிழ் தலைவர்.

➢மக்ஸ்வல் பரணகம

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஆவார்.

➢கலாநிதி R.S. ஸ்பிட்டல்

எமது நாட்டு ஆதிவாசிகளாகிய வேடர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு வெளியிடப்பட்ட முதலாவது தொகுதி நூலை வெளியிட்டவர்.

➢V.K சமரநாயக்க

இலங்கையின் தகவல் தொழில்நுட்ப துறையின் தந்தையென சிறப்பிக்கப்படுவர்.

➢லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்

இலங்கை திரைப்படத்துறையின் முன்னோடியாவார்.

➢பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர

2014 ஜூன் மாதம் இடம்பெற்ற இவரது 100ஆவது ஜனன தின விழாவில் யுனெஸ்கோ நிறுவனத்தின் விஸ்வ கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இதனைப் பெற்ற ஒரேயொரு இலங்கையர் ஆவார்.

இவரால் உருவாக்கப்பட்ட அதிசிறந்த நூல்களான மனமே சிங்கபாகு கலாசார மேடை நாடக பாரம்பரியத்தின் வருகையை உரித்துரைக்கப்பட்ட யதார்த்தமான முதலாவது சிங்கள நாடகமாகும்.

இவர் ஆசியாவின் நூதன சேக்ஸ்பியர் எனும் புகழ் பெயரால் அழைக்கப்படுகின்றார்.

➢பேராசிரியர் ஏ.ஜெ.வில்சன்


இலங்கையின் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் குறிப்பிடப்படும் ஜனாதிபதி முறை டிகோல் மயமான ஏதேச்சதிகாரமானதென்று விபரித்த அரசியல் விஞ்ஞானியாவார்.

➢திரு.எமர்சன் ரெனென்ற்

பண்டைய இலங்கையின் தொழில்நுட்பவியல் திறன்களை எடுத்துரைக்கும் வரலாற்று நூலை 1959 ஆம் ஆண்டில் வெளியிட்ட பிரித்தானிய சிவில் அலுவலர்.

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளைய வலம்புரியில் பிரசுரமாகும்

தொடர்பு-வலம்புரி கல்விப்பிரிவு
தொ.பே:-076 6363 378







# பேருந்து விபத்தில் சிக்கிய 20பேர் வைத்தியசாலையில்

துல்ஹிரிய பிரதேசத்தில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 20 பேர் படு காயங்களுடன் வரக்காபொல மற்றும் கேகாலை ஆகிய வைத்தியசாலைகளில் அனுதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. குருநாகலையில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பேருந்து ஒன்றும் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த பேருந்து ஒன்றும் குருநாகல் கொழும்பு பிரதான வீதியில் துல்ஹிரிய பகுதியில் வைத்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் இரு பேருந்துகளிலும் பயணித்த பயணிகளில் 20 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வரக்காபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், இதில் மேலதிக சிகிச்சைக்காக இருவர் கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை துல்ஹிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 817

பிரசன்னா




மது




லச்சுமா




றொகான்




றஜீவ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## காணாமற் போனவர்கள் தொடர்பில் கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கை

காணாமற் போனவர்கள் கண்டறியப்பட வேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச ரீதியாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் ஊடாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கையினை எடுத்துவருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் சித்தாண்டியில் கடத்தப்பட்டு காணாமற் போனவர்களை நினைவு கூரும் நிகழ்வு கடந்த புதன் கிழமை காலை சித்தாண்டியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற் போனவர்கள் கண்டறியப்பட வேண்டும் என்பதற்காக 26வருடங்களுக்கு பின்னர் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு படுகொலைச் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

சித்தாண்டி முருகன் ஆலயத்தில் இருந்து அழைத்துச்செல்லப்பட்டவர்கள் கும்புறுமுலை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அன்றைய காலப் பகுதியில் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் நடைபெற்ற இரண்டு வாரங்களுக்கு பிறகு கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து 153 பேர் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத சூழ்நிலையிலேயே நாங்கள் இன்றுவரையில் இருந்து வருகின்றோம்.

காணாமற் போனவர்களின் பிரச்சினையென்பது சர்வதேசமயப்படுத்தப்பட்ட பிரச்சினையாக இன்று மாறியுள்ளது. அதே போன்று எமது விடுதலைப் போராட்டமும் இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்ட பிரச்சினையாக மாறியுள்ளது.

இது தொடர்பிலேயே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் காணாமற் போனோர் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அது தொடர்பிலான காரியாலயம் ஒன்றை இயக்குவதற்கான ஒப்புதலும் பாராளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னைய காலம், 1990இற்கு பிந்தைய காலம், 2009இற்கு பிந்தைய காலம் என பல்வேறுபட்ட காலப்பகுதியில் பெருமளவிலானோர் காணாமற்போயுள்ளனர்.

தற்போதும் ஒரு சில பகுதிகளில் இந்த காணாமற்போகும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் கண்டறிந்து அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறுகின்ற கடப்பாடு ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 80 | 40 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 120 | 90 | 120 | 100 |
| தக்காளி | 60 | 50 | 60 | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 100 | 90 | 60 | 100 |
| கோவா | 120 | 80 | 120 | 100 | 120 | 100 |
| கரட் | 100 | 80 | 120 | 120 | 140 | 120 |
| பூசணி | 30 | 25 | 40 | 35 | 60 | 80 |
| புடோல் | 50 | 20 | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 75 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 60 | 160 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 40 | 50 | 80 | 40 |
| கருணைக்கிழங்கு | 120 | — | 160 | — | 120 | 150 |
| பயற்றங்காய் | 100 | 30 | 60 | 40 | 80 | 50 |
| லீக்ஸ் | 140 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 40 | 60 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 130 | 100 | 160 | 100 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 60 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 200 | — | 200 | 150 |
| கத்தரித்தம்புள்ள | 50 | 25 | 60 | 40 | 50 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 30 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 160 | — | 160 | 90 | 200 | 150 |
| முள்ளங்கி | 30 | 20 | 40 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 30 | 10 | 50 | 40 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியானார் 260

**2005ஆம் ஆண்டு தேர்தலில்**

2005ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு 48 இலட்சத்து 87ஆயிரத்து 162 வாக்குகளும் (50.29 சதவீதம்) எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு




ஏறத்தாழ 47 இலட்சம் வாக்குகளும் (47.43 சதவீதம்) கிடைத்திருந்தது.

விடுதலைப்புலிகளின் ஆதரவு கூட்டணி கட்சிகள் அந்தத் தேர்தலைப் புறக்கணித்து இருந்தன. கடந்த முறை மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மகிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

**7 ஆண்டுகள்**

ஜனாதிபதியாக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்றார். ஜனாதிபதி பதவிக் காலம் 6 ஆண்டுகள். ஒரு ஆண்டுக்கு முன்பே தேர்தல் நடத்தி வெற்றி பெற்றுள்ளதால் மகிந்த ராஜபக்ஷ 7 ஆண்டுகள் பதவி வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பொன்சேகாவுக்கு காவல்**

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொன்சேகா தங்கியிருந்த கொட்டேலை சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டது.

இராணுவப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற பொன்சேகா சதித்திட்டம் தீட்டினார் என்றும் தன்னைக் கொலை செய்ய திட்டம் வகுக்கப்பட்டது என்றும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டினார்.

இது முற்றிலும் அபாண்டம் என்று பொன்சேகா மறுத்தார். என்னைக் கொடுமைப்படுத்தினால் மகிந்த ராஜபக்ஷ பற்றிய பல அரசு இரகசியங்களை அம்பலப் படுத்துவேன் என்று எச்சரித்தார்.

**கைது**

இந்நிலையில் 08-02-2010 திங்கட்கிழமை இரவு சரத் பொன்சேகாவை இராணுவத்தினர் கைது செய்தனர். அவருடன் அவரது செயலாளர் டி சில்வாவும் கைது செய்யப்பட்டார்.

பொன்சேகாவை இராணுவத்தினர் தரதர வென்று இழுத்துச் சென்றதாகச் சம்பவத்தை நேரில் பார்த்த ஒரு பிரமுகர் கூறினார்.

பொன்சேகாவை இரகசியமான இடத்துக்கு இராணுவத்தினர் கொண்டு சென்றனர். அங்கு அவரிடம் விசாரணை நடைபெற்றது.

**தயார் நிலையில் இராணுவம்**

இறுதிக்கட்ட போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்காக அரசு மீது சர்வதேச நீதிமன்றில் விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கப்படுவதாக சரத் பொன்சேகா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார். இதைத் தொடர்ந்து பொன்சேகா கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அவரது கைது காரணமாக கொழும்பு நகரில் பதற்றம் நிலவியது. இதனால் இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டனர்.

**தமிழர்களின் எதிர்காலம்**

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்போம் என்று பதவிக்கு வரும் ஒவ்வொரு ஜனாதிபதிகளும் உறுதியளிப்பது வழக்கம். ஆனால் அதை நிறைவேற்றுவதில்லை.

தமிழர்களுக்கு நியாயம் கோரி தமிழர்களின் தந்தை என்று போற்றப்படும் செல்வநாயகம் அஹிம்சை வழியில் போராடினார். அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை ஆட்சியாளர்கள் கிழித்து எறிந்ததால் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமானால் "தமிழீழம்" என்ற இடத்தில் 14-05-1976இல் நடந்த மாநாட்டில் செல்வநாயகம் தீர்மானம் நிறைவேற்றினார்.

அவருடைய மரணத்துக்குப் பிறகு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தமிழீழம் கோரி போராடினர். பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் கால் நூற்றாண்டு காலம் நடத்திய போரில் பல வெற்றிகள் பெற்ற போதிலும் 17-05-2009இல் நடந்த இறுதிப்போரில் தோல்வியைத் தழுவினார்கள். பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக அரசு அறிவித்தது.

இந்நிலையில் ஜனாதிபதியாக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அகதி முகாம்களில் இன்னமும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. அமெரிக்கா உட்பட உலக நாடுகள் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்தால்தான் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க முடியும்.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் மரணமடைந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் கடந்த சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு இருந்தார். நீரிழிவு மற்றும் இதயக்கோளாறு போன்றவை அவருக்கு இருந்தன. மேலும் பக்கவாதத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் மலேசியாவில் இருந்து சென்னையில் சிகிச்சை பெறுவதற்காக சென்றார். ஆனால் விமான நிலையத்திலேயே இந்திய அதிகாரிகள் திருப்பி விட்டனர். அதன்பிறகு இலங்கை வந்த அவரைச் சிங்கள இராணுவம் பிடித்துச் சென்று சிறையில் வைத்தது. உடல் நிலை மோசமானதால் அவரை விடுதலை செய்ததுடன் சொந்த ஊரான யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறைக்கு அனுப்பி வைத்தது.

**காலமானார்**

வல்வெட்டித்துறையில் உள்ள பிரதேச வைத்திய சாலையில் பார்வதி அம்மாள் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் 20-02-2011 அன்று அதிகாலை 6.10 மணியளவில் அவர் காலமானார்.

பார்வதி அம்மாளுக்கு வயது 81. ஏற்கனவே அவருடைய கணவர் வேலுப்பிள்ளை கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறந்து விட்டார். பார்வதி அம்மாள்-வேலுப்பிள்ளை தம்பதிக்கு விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தவிர மனோகரன் என்ற மற்றொரு மகனும் இரண்டு மகள்களும் உள்ளனர். ஒரு மகள் கனடா நாட்டில் உள்ள ரொறண்டோ நகரிலும் மற்றொரு மகள் சென்னையிலும் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.

(தொடரும்)

# பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

**மட்டக்களப்பு - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வியாழக் கிழமை பொது நிர்வாக மண்டபத்தில் வந்தமர்ந்து கொண்ட மாணவர்கள் பெரும் எண்ணிக்கை யிலானோர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த 31 மாணவர்களுக்கு பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இந்த வகுப்புத் தடை நியாயமற்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே மாணவர்கள் இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் பல தடவைகள் கலந்துரையாடிய போதிலும், குறித்த மாணவர்களின் வகுப்புத் தடையை நீக்க நிர்வாகம் முன்வரவில்லையென மாணவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக ஒழுக்க விதிகளை மீறி சீரான நிர்வாகத்துக்கு இடைஞ்சலின்றியும் பல்கலைக்கழக ஒழுக்க விதிகளைப் பின்பற்றி நடக்கும் ஏனைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் இடைஞ்சலாக இருக்காத வகையிலும் பல்கலைக்கழகத்தை வழி நடத்த வேண்டும் என்பதாலேயே தாம் குறித்த சில மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

ஒழுங்கீனமாக நடந்து கொண்ட குறித்த மாணவர்கள் மீதான வகுப்புத்தடை, அடுத்த 2 மாதகாலத்தில் முடிவடையவுள்ளதாகவும் பல்கலைக்கழக நிர்வாகம் மேலும் தெரிவித்தது.

இந்நிலையில், தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை தாங்கள் தொடர்ந்து போராடவிருப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர். (இ-7)

## திருமறைக்கலாமன்றத்தின் நாடக விழா கொழும்பில்







( கொழும்பு )

நீண்டகால இடைவெளிக்கு பின்னர் தலைநகர் கொழும்பில் திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக விழா நாளை 27ஆம் திகதி சனிக்கிழமையும், நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத் தில் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறவுள் ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பல்லினக் கலைஞர்களின் இணைவில் இடம் பெறவுள்ள இந்நாடக விழாவில் நான்கு அளிக்கைகள் அரங்கேறவுள்ளன.

முதலாம் நாளில் குசேலர் இசை நாடகமும், 13.7+= என்னும் வார்த்தைகளற்ற நாடகமும், இரண்டாம் நாளில் மஹாகவியின் புதியதொரு வீடு கவிதை நாடகமும், அசோகா இசை அபிநய அளிக்கையும் மேடையேற்றப்படவுள்ளன. (இ)

## புலனாய்வுப் பிரிவுக்கு புதிய உத்தரவுகள்

வடக்கு, கிழக்கில் செயற்பட்டுவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு புதிய உத்தரவுகள் வழங்கப்பட்டு அது பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் மிகத் தீவிரமாக செயற்பட்டு வந்த இலங்கையின் இராணுவப் புலனாய்வுப் பிரிவை வடக்கு, கிழக்குக்கான பிரதான ஒரேயொரு முக்கிய புலனாய்வு அமைப்பாக செயற்படுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் பௌத்தமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிரான உணர்வலைகள் அதிகரித்துள்ள நிலையிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையிலுமே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு பதவியேற்ற பின்னர் வடக்கு, கிழக்கின் புலனாய்வு நடவடிக்கைகளுக்குப் பொலிஸாரே பொறுப்பாகவுள்ளனர் என சர்வதேச சமூகத்துக்கு காண்பிப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தற்போது அந்தத்திட்டம் கைவிடப்பட்டு வடக்கு, கிழக்கின் புலனாய்வு நடவடிக்கைகளுக்கான பொறுப்பு இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக 2006 இல் கோத்தபாய ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னரே இதன் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் பயங்கரவாத எதிர்ப்பு தந்திரோபாயங்களை மையமாக வைத்து இதனை அவர் மாற்றியமைத்தார்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் 12 டிவிசன்களில் 11 டிவிசன்கள் வடக்கு, கிழக்கில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷவால் பலப்படுத்தப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவை புதிய அரசு எவ்வித மாற்றங்களுமின்றி வடக்கு, கிழக்கில் அனுமதித்திருந்தது.

இந்நிலையில், தற்போது அதன் செயற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு பொதுமக்களை ஏமாற்ற முயற்சி

### தமிழ் முற்போக்கு முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணியால் தோட்டத்தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 2500 ரூபா இடைக்கால கொடுப்பனவை, தமிழ் முற்போக்கு கூட்டணி கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிபந்தனையுடன் பெற்றுக்கொண்டதாக பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு மக்களை ஏமாற்ற முனைகின்றனர் என்று தமிழ் முற்போக்கு முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளவுயர்வை தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் கடந்த வருடம் அரசாங்கத்தினால் தனியார் துறையினருக்கு 2500 ரூபா சம்பளவுயர்வு வழங்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணி தனியார் துறையினருக்கு முன்மொழியப்பட்டுள்ள 2500 ரூபா தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்து அரசாங்கத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன் பலனாக ஜனாதிபதி, பிரதமர், தொழில் அமைச்சர், நிதிஅமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தினால் எமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திறைசேரியினால்தேயிலை சபையினூடாக கம்பனிகளுக்கு பாரிய தொகைக்கடன் வழங்கப்பட்டு அதன் மூலமாக 2500 ரூபா இடைக்கால கொடுப்பனவினை நிவாரணப்படியாக நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

இது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வரலாற்று சாதனையாகும்.

இந்த இடைக்கால கொடுப்பனவினை பெற்றுக் கொடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தரப்போடு வெளிப்படையாக பேச்சுவார்த்தை நடத்தியதே தவிர கம்பனிகளுடன் இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று குடிவரவு- குடியகல்வு திணைக்களத்திற்கு பூட்டு

குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு இன்று விடுமுறைவிடப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. மருதானையிலுள்ள இந்த அலுவலகத்தை பத்தரமுல்லைக்கு மாற்றும் நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்.

இதன்படி, குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் எந்தவொரு செயற்பாடுகளும் இடம்பெறாது.

இதன் காரணமாக கண்டி, மாத்தறை மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளிலுள்ள திணைக்களத்தின் கிளைகளுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜிகணேசன் சுய விமர்சனம் 238

தங்கை: எல்லோரையும் மயக்கிய மங்கை.

பாலாடை:நாள் அதிகம் ஆனதால் சிறிது புளித்து விட்டது.

திருவருட் செல்வர்: ``மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்'' இருந்தும் பட்டபாட்டிற்கு பலன் எங்கே?

ஊட்டி வரை உறவு: படம் சிறப்பாக ஓடியும் தயாரிப்பாளர் ``எனக்கு அதிகம் பணம் கிடைக்கவில்லை'' என்று சொல்லிக்கொண்ட படம்.

இரு மலர்கள்:மூன்று பேர் பந்தாடினர். ஒருவர் பந்தை அடித்தார். மற்றொருவர் ஒதுக்கிக் கொடுத்தார். மூன்றாமவர் கோல் போட்டார்!

திருமால் பெருமை: திருமால் பெருமையே பெருமை. ஆனால் லட்சுமி கடாட்சம் எங்கே?

அரிச்சந்திரா: அதை ஏன் கேட்கிறீர்கள்! நான் உண்மையிலேயே பேசியே எவ்வளவு பணம் வந்தது தெரியுமா?

கலாட்டா கல்யாணம்: உண்மையிலேயே கலாட்டா இல்லாமல் கல்யாணம் நடந்தது.

என் தம்பி: பல ஆண்டுகளுக்குப் பிறகு கத்தி வீச்சை பழக்கப்படுத்திக் கொண்டேன்.

தில்லானா மோகனாம்பாள்: ``தொடர் நாவலை படமெடுத்தால் ஓடாதோ'' என்ற எண்ணத்தை மாற்றி கவனத்தோடு சிறப்பாகத் தயாரித்தால் மக்கள் ரசிப்பர் என்று நிருபித்துக் காட்டிய படம்.

எங்க ஊர் ராஜா: சில சமயம் எனக்கும் சுயநலம் உண்டு. இது எங்கள் குடும்பக் கதை.

லட்சுமி கல்யாணம்: இவ்வளவு ரசிப்பை நான் எதிர் பார்க்கவில்லை.

உயர்ந்த மனிதன்: எனது முதல் படமும் ஏவி.எம்மில் உருவாயிற்று. 125ஆவது படமும் ஏவி.எம். தயாரிப்பு. எந்த நடிகனுக்கும் கிடைக்காத வாய்ப்பு.


அன்பளிப்பு: இயக்குநர் தயாரிப்பாளருக்கு கட்டுப்பட வேண்டியது தான். என்றாலும் இந்த அளவுக்கா!

தங்கச் சுரங்கம்: ஹ... ஹ... ஹ...!நான் ஜேம்ஸ் பாண்டாம்!

காவல் தெய்வம்: மூன்றே நாட்களில் நடித்து முடித்த பாத்திரம். என்றாலும் அந்த சாமுண்டி என்னை அதிகமாகத்தான் ஆட்டிப்படைத்து விட்டான். அது என் இதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கும்.

ராணி லலிதாங்கி: நான் முதல் முதலாக சிவ தாண்டவம் ஆடிய படம்.

தாயே உனக்காக: இது நண்பர் கவிஞர் கண்ணதாசனுக்காக.



பக்தராமதாஸ்: நடிகர் சக்ரவர்த்தி நாகையா அண்ணா அவர்களுக்கு என் அன்புக் காணிக்கை.

மர்ம வீரன்: மறைந்த ஸ்ரீராமும் என்னுடைய இனிய நண்பர் தான்.

ஸ்கூல் மாஸ்டர்: மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் தோன்றி நடித்தேன். அதற்குப் பரிசு ஒரு தங்கப் பேனா. மறைந்த பிரதமர் சாஸ்திரி அவர்களிடம் நான் கொடுத்த பொருட்களில் அந்தப் பேனாவும் ஒன்று.

(சிவாஜியின் சுய விமர்சனம் இத்துடன் நிறைவடைந்தது.)

தமிழ்த்திரை உலகில் எம். ஜி.ஆரும் சிவாஜிகணேசனும் புகழின் சிகரத்தில் இருந்த அதே காலகட்டத்தில் தன் அழகாலும் இயற்கையான நடிப்பாலும் ரசிகர்களின் உள்ளம் கவந்தவர், ஜெமினிகணேசன் .எம்.ஜி. ஆர்., சிவாஜி, ஜெமினி கணேசன் ஆகிய மூவருமே சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போல கலை உலக மூவேந்தர்களாகத் திகழ்ந்தார்கள்.

எம்.ஜி.ஆரும் சிவாஜியும் நாடக மேடையில் இருந்து திரைஉலகத்துக்கு வந்தவர்கள். ஜெமினிகணேசனோ, நாடக அனுபவம் இல்லாதவர். கல்லூரி விரிவுரையாளர் உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டு, சினிமா நடிகரானார்.

### இளமைப்பருவம்

வசதியான குடும்பத்தில் பிறந்து இளமையில் செல்வ செழிப்போடு வாழ்ந்தவர் ஜெமினிகணேசன்.

ஜெமினிகணேசனின் தந்தை பெயர் ராமசாமி. தாயார் கங்கம்மா. புதுக்கோட்டையில் நல்ல வசதிகளுடன் வாழ்ந்த குடும்பம். இந்த தம்பதியருக்கு 2 ஆண் குழந்தைகள் .(தொடரும்..)




- 1768 - கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற் பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தான்.
- 1795 - திருகோணமலையின் பிரெடரிக் கோட்டையை ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படையினர் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் குடியேற்ற நாடான டோகோலாந்து பிரெஞ்சு மற்றும் பிரித்தானியர்களினால் முற்றுகைக்குள்ளானது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனிப் படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.
- 1920 - ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1942 - உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜெர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியகற்றி குழந்தைகள், நோயாளிகள் உட்பட 500 பேரை கொன்று குவித்தனர்.
- 1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1972 - 22வது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.
- 1978 - முதலாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராக பதவியேற்றார்.
- 1978 - முதலாவது ஜெர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.
- 1993 - யாழ்ப்பாணம், கிளாலியில் இரண்டு இலங்கைக் கடற்படைப் படகுகள் கடற் கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1997 - அல்ஜீரியாவில் 60க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - திருகோணமலை மூதூர் கிழக்கில் சிறிலங்கா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பொதுமக்கள் இருவர் பலியாகினர்.

பிறப்புக்கள்

- 1880 - கியோம் அப்போலினேர், பிரெஞ்சு எழுத்தாளர். (இ. 1918)
- 1883 - திரு. வி. கலியாணசுந்தரனார். தமிழறிஞர். (இ. 1953)
- 1910 - அன்னை தெரேசா, அல்பேனிய உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி, நோபல் பரிசு பெற்றவர். (இ. 1997)
- 1927 - அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர். (இ. 1989)
- 1933 - வி. தெட்சணாமூர்த்தி, ஈழத்து தவில் கலைஞர். (இ. 1978)
- 1934 - ஏ. ஜே. கனகரட்னா, ஈழத்து இலக்கியவாதி. (இ. 2006)
- 1952 - பொன். சிவகுமாரன், ஈழ விடுதலைப் போராட்டத்தில் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளி. (இ. 1974)
- 1956 - மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி.

இறப்புகள

- 1723 - ஆன்டன் வான் லீவன்ஹூக், டச்சு உயிரியலாளர் . (பி. 1632)
- 1865 - யோகான் பிரான்சு என்கே, செருமானிய வானியலாளர். (பி. 1791)

## அன்னை தெரேசா



அன்னை தெரேசா (Mother Teresa, ஒகஸ்ட் 26, 1910 - செப்டம்பர் 5, 1997), அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்தியக் குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழைஎளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தருவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றியவர் இவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார்.1970 ஆம் ஆண்டுக்குள் இவர் சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார். இதற்கு மேல்கம் முக்கெரிட்ஜ் என்பவரின் சம்திங்க் பியுடிபுல் ஃபார் காட் என்ற ஆவணப்படம் ஒரு முக்கிய காரணமாகும். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக்கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை அடங்கும்.பல்வேறு நபர்கள், அரசுகள் மற்றும் அமைப்புகளெனப் பலர் இவரைப் புகழ்ந்து வந்தாலும், பலவிதமான விமர்சனங்களையும் இவர் சந்தித்தார். இத்தகைய விமர்சனங்கள் கிறித்தபர் ஃகிச்சின்சு, மைக்கேல் பேரன்டி, அரூப் சட்டர்ஜி போன்ற நபர்களாலும் விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகளாலும் சாட்டப்பட்டது. இவர்கள் அன்னை தெரேசாவின் உறுதியான கருக்கலைப்பு எதிர்ப்பு நிலையையும், ஏழ்மை தரும் ஆன்மீக மேன்மையின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையையும், இறப்பின் வாயிலிலிருப்போருக்கு அவர் ஞானஸ்தானம் அளிக்கிறார் எனவும் குற்றம் சாட்டினர். சில செய்தி ஊடகங்கள் அவரது நல்வாழ்வு மையங்களின் மருத்துவ வசதித் தரத்தைப் பற்றி விமர்சிப்பனவாகவும், நன்கொடைப் பணம் செலவு செய்யப்படுவதின் விதத்தைப் பற்றிக் கவலை எழுப்பியும் செய்திகளை வெளியிட்டன.இவரின் இறப்புக்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் பொருத்தமான ஆராய்ச்சி நல்லறிவாகும்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆவணப்படுத்தலில் கவனம் செலுத்துங்கள்

வரலாறு என்ற சொற்பதம் ஆவணப்படுத்தலில் இருந்து பிறந்தது என்று சொல்வதில் தவறில்லை.

ஆவணப்படுத்தல் இல்லாமல் வரலாறு பற்றி எவரும் பேசமுடியாது. இலங்கையின் வரலாறு பற்றி பேசுகின்றவர்கள் அகழ்வாராய்ச்சிகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நிரூபணம் செய்கின்றனர்.

இன்று இலங்கையில் நடந்து கொண்டிருக்கின்ற இன விவகாரத்தின் பின்னணியில் ஆவணப்படுத்தல்களில் ஏற்பட்ட அக்கறையீனங்கள் காரணமாக உள்ளன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் தங்களின் வரலாறுகளை ஆவணப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை என்பது மறுதலிக்க முடியாத உண்மையாகும்.

தென்பகுதிக்குச் சென்றால் அங்கிருக்கக் சுவடிய பௌத்தவிகாரைகள், குளங்கள், ஓவியங்கள், கட்டுமானப்பணிகள் தொடர்பில் ஒரு வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவநம்பியதீசன், மகிந்ததேரர், சங்கமித்தை என்பவர்களுடன் வரலாறு தொடுக்கப்பட்டு ஒரு நெறிமுறையில் அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக பௌத்த விகாரைகள் அமைந்த வரலாறு, அதன் பின்னணி என்பன அந்த பௌத்த விகாரையிலேயே ஆவணமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் அந்த ஆவணங்களை பொதுமக்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் தமிழர்களாகிய நாங்கள் ஆவணப்படுத்தல் என்ற விடயத்தில் முன்பும் கருசனை கொள்ளவில்லை. இப்போதும் கருசனை கொள்ளவில்லை.

இதன் காரணமாக தமிழர்களின் பூர்வீகம், அவர்களின் இருப்பு, அவர்களின் வாழ்விடம் என்பன குறித்த விடயங்களில் திரிபுபடுத்தல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான திரிவுபடுத்தல்களை முறியடிப்பதற்கான ஒரே வழி ஆவணப்படுத்தல் என்ற ஆதாரங்களாகவே இருக்கமுடியும். இருந்தும் அத்தகைய ஆவணங்களை–ஆதாரங்களை பாதுகாப்பதிலும் அவற்றை மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்துவதிலும் நாங்கள் இன்னமும் முன்னேற்றம் காணவில்லை.

ஆகையால் தமிழ் மக்களின் வரலாறு, தமிழ் மக்களின் வழிபடுதலங்கள் தோன்றிய காலங்கள், அவர்களின் வாழ்வியல்கள், அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ஆதாரங்கள் என்பவற்றை பேணிப்பாதுகாக்கும் ஆவணக்காப்பகம் வடக்கு மாகாண சபையின் கீழ் அமைக்கப்படவேண்டும்.

இத்தகையதொரு ஆவணக்காப்பகத்தை அமைப்பதற்கும் அங்கு அடையாளச் சின்னங்கள், கல்வெட்டுக்கள், புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த எச்சங்கள் என்பனவற்றை பாதுகாத்து அவற்றை பொதுமக்களும் வெளிநாட்டவர்களும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

இதற்கு மேலாக எங்கள் முன்னோர்களின் வாழ்வியலில் பயன்படுத்தப்பட்டு வந்த வீட்டு உபகரணங்கள், கருவிகள் என அனைத்தும் விற்பனையாகி தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு மிகப் பெரிய இலாபங்கள் வெளிமாவட்ட வர்த்தகர்களால் ஈட்டப்பட்டுள்ளன.

இன்னும் மிகச் சொற்பமானவையே எஞ்சியுள்ளன என்ற நிலையில், எங்கள் முன்னோர்களின் வாழ்வியல் அடையாளங்களை பாதுகாப்பது தொடர்பிலும் அதீத கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் எங்கள் வரலாறு ஆவணப்படுத்தலின்றி அஸ்தமனமாகி விடும்.

## நிரந்தர சமாதானம் வேண்டி அமைதி ஊர்திப் பேரணி

இலங்கை மனித உரிமைகள் இயக்கத்தின் ஏற்பாட்டில் நிரந்தர சமாதானத்தை வேண்டி யாழில் இருந்து அம்பாந்தோட்டை வரை அமைதி நடைபாதை ஊர்திப் பேரணி நடைபெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாணத்துக்கான இயக்குநர் வி.சிவராசா தெரிவித்துள்ளார்.

இன்று காலை யாழ். நாகவிகாரையில் 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி நல்லூர் கோவிலை வந்தடைந்து முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தை சென்றடையும்.

தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு கைதடி பிள்ளையார் கோவிலை சென்றடைந்து பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி முத்துமாரியம்மன் கோவில் ஊடாக சென்று பிற்பகல் 1.30 மணியளவில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் மதிய உணவும் நிகழ்ச்சிகளும் நடைபெறும். பின்னர் மாலை 4 மணிக்கு இராமாவில் கந்தசுவாமி கோவிலை சென்றடைந்து மாலை 5 மணிக்கு உசன் சாந்த மௌளஸ் தேவாலயத்திலும் 6 மணிக்கு பளை அம்மன் கோவிலிலும் மாலை 6.30 மணிக்கு ஆனையிறவு சிவன் கோவிலிலும் இரவு 7.30 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா சுவாமிகள் சைவ சிறுவர் இல்லத்தை சென்றடைந்து தரித்து நிற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சிறுவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ஆமணக்கம் விதையினை பருப்பு என நினைத்து உட்கொண்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி புனித நகர்ப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வீட்டில் இருந்த பெரியவர்கள் வெளியில் சென்ற வேளை சிறுவர்கள் அப்பகுதியில் விளையாட்டில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்போது அங்கு நின்ற ஆமணக்கு ஒன்றின் விதைகளை அவர்கள் பருப்பு என நினைத்து உட்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களின் உடலில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து அவர்களிடம் விசாரித்த போது ஆமணக்கம் விதைகளை உட்கொண்டமை தெரியவந்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆறு சிறுவர்கள் நண்பகல் 12 மணியளவில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-7)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### குபேர பொம்மையை நம்புகிறவர்களா நீங்கள்?

குபேர பொம்மையை அழகுக்கு பயன்படுத்துவது மட்டுமல்லாமல் அதை கடவுளாக மதிக்கின்றனர். அதன் மகத்துவம் என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

❖ வீட்டின் கிழக்கு திசை தான் குடும்பத்தின் அதிர்ஷ்ட புள்ளியாக கருதப்படுகிறது. அதனால் உங்கள் குடும்பத்தில் ஒற்றுமையும் சந்தோஷமும் நிலவ வேண்டும் என்றால் சிரிக்கும் குபேர பொம்மையை வீட்டின் கிழக்கு திசையில் வைத்திடவும்.

❖ குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டைகள், சச்சரவு, வாக்குவாதம், வீட்டில் இருப்பதற்கே உங்களுக்கு பிடிக்காமல் இருக்கும் நிலை அப்படிப்பட்ட நேரங்களில், இவரை கிழக்கு திசையில் வைப்பதால், உங்கள் மனதிற்கு உறுதியை கொடுக்கும்.

❖ கிழக்கு திசையில் வைப்பதால் செல்வம் பெருகுவதோடு வாழ்க்கையில் வெற்றி கிட்ட உதவிடும். அதே போல் தனி நபரின் இலக்கை நோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நேர்மறை எண்ணங்களை நமக்குள் கொண்டு வரும்.

❖ குபேர பொம்மையை அறை, ஹோல், படுக்கையறை அல்லது உணவருந்தும் அறை என எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம். தென் கிழக்கு திசையில் வைத்தால் எதிர்பாராத அதிர்ஷ்டமும், நிறைவான வருமானமும் கிடைக்குமாம்.

❖ சிரித்து கொண்டிருக்கும் அந்த பொம்மையை பார்க்கும் போது மன அழுத்தம் குறைவதோடு, பிரச்சினைகளை எதிர் நோக்க புது நம்பிக்கை பிறக்கிறது.

❖ புத்த மதத்தில் இந்த பொம்மையை கடவுளாக மதிக்கின்றனர் எனவே இதை இழிவுபடுத்தவோ அவமரியாதை ஏற்படுத்தவோ கூடாது.

## நல்லூர்க்கந்தனுக்கு




### குரு மருந்து

அரும ருந்தொரு குரும ருந்து
அடியார் கண்டு களிக்கும் மருந்து (அரு)
இருவி னையைப் போக்கும் மருந்து
இன்ப நிலையில் நிறுத்தும் மருந்து (அரு)
ஒருபொல் லாப்புமில்லை என்ற மருந்து
இம்மைம றுமைக்கும் ஏற்ற மருந்து (அரு)
திருவார் நல்லூரில் வாழும் மருந்து
தேவாதி தேவருங் காணா மருந்து (அரு)

சிவத்திரு யோகர் சுவாமிகள்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நவராத்திரியின் ஒன்பது இரவுகள்

நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்றும் புதிய இரவு என்றும் பொருள்படும் (நவ-ஒன்பது, புதிய). தாயின் கருப்பையிலும் பூமிக்கு அடியிலும் இருளில்தான் படைப்பு (ஆக்கல்) நிகழ்கிறது. கருப்பையில் இருக்கும் ஒன்பது மாதங்களில் ஆத்மா, மனித உருவாக வடிவெடுக்கிறது. அது நீண்ட இந்த ஒன்பது இரவுகளைக் குறிக்கிறது.

இரவு, நாம் இழந்த சக்தியைத் திரும்பப் பெறச் செய்கிறது, ஓய்வைத் தருகிறது. நாம் நாளெல்லாம் உழைத்து விட்டு வீடு சேர்ந்ததும் களிப்போடு கொண்டாடுகிறோம், பிரார்த்தனை செய்கிறோம். இரவில் முழு உலகமும் (எல்லா ஜீவராசிகளும்) உறங்குகிறது. ஆசிரமத்துக் காவற்காரனும்கூட.

இந்த நவராத்திரி மிகவும் உத்தமமானது; ஒன்பது இரவுகளும் மிக உன்னத சக்தியுடையவை. தேவியின் அறுபத்து நான்கு சக்திகளும் அனைத்து ஜீவராசிகளையும் ஆளுகின்றன. இவ்வுலக வாழ்விற்கும் மற்றும் ஆன்மீக வாழ்விற்கும் உள்ள ஆதாயங்களுக்கெல்லாம் பொறுப்பானவை. தேவியின் இந்தத் திவ்ய சக்திகள் ஒருவரின் விழிப்புணர்வுள்ள மெய்யறிவிலேயே அடங்கியுள்ளன. நம்முள் உள்ள இத்திவ்ய சக்திகளைத் தூண்டவும் மேலும் மேலும் நம் ஆன்ம உணர்விற்குப் புத்துயிரளிக்கவும் நவராத்திரியின் ஒன்பது இரவுகளும் கொண்டாடப்படுகின்றன.

உன்னுடைய உடலையும் மனதையும் தூய்மையாக்கு. உன்னுடைய உடலை நீரினால் தூய்மையாக்கு. உன்னுடைய மனதை ஞானம், பிரணாயாமம், சுதர்சனக் கிரியா, தியானம் இவற்றால் தூய்மையாக்கு.



## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### பதவியில் இருக்கிறீர்களா?

❖ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். படைப்புகளுக்கு நன்மை புரிபவரே இறைநேசத்திற்கு உரியவராவர்.

❖ மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்.

❖ அன்பு என்பது உங்கள் உறவினர்கள் மீது மட்டும் செலுத்தப்படுவதல்ல. அன்பு அனைவர் மீதும் செலுத்தப்படுவதாகும்.

❖ தனிமனிதனின் உரிமைகளை பறிக்கக் கூடாது. சமுதாயத்தின் தேவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. இவ்விரண்டிற்குமிடையில் இணக்கமும் நடுநிலையும் வேண்டும்.

❖ கொடுமைக்குள்ளானவனின் பிரார்த்தனைக்கு அஞ்சுங்கள், ஏனென்றால் அந்தப் பிரார்த்தனைக்கும் இறைவனுக்குமிடையில் திரை கிடையாது. (இறைவனால் விரைந்து ஏற்றுக் கொள்ளப்படும்)

❖ நாம் பதவியில் அமர்த்தி இருக்கும் ஒருவர் நம்மிடமிருந்து ஓர் ஊசியை மறைத்தாலும், அல்லது அதனை விட ஒரு சிறிய பொருளை மறைத்தாலும் அதனை அவர் அபகரித்துக் கொண்டார் என்றே பொருள். மறுமை நாளில் அதனை அவர் சுமந்த வண்ணமே வருவார்.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருநது

# ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மென்பந்து சுற்றுத்தொடர்

## அளவெட்டி மத்தி வெற்றி



மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடை பெற்றன.

இதில் நடைபெற்ற குழு B இற்கான 4 ஆவது காலிறுதிப் போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில்வென்ற பருத்தித்துறை வீனஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்ற முடிவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 75 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் வி.க 5.5 பந்துப்பரிமாற்ற நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 29 ஓட்டங்களை மாத்திரம் பெற அளவெட்டி மத்தி வி.க. 46 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

அளவெட்டி மத்தி வி.க. சார்பில் பந்துவீச்சில் 4 இலக்குகளை அள்ளிய நிஷா ஆட்ட நாயகனாக தெரிவானார்.(கு)

# யாழ்.பல்கலையில் ஒலிம்பிக் தீப நிகழ்வு

12 ஆவது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள்-2016 வயம்ப பல்கலைக்கழகத்தில் செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது. இதற்காக இம்முறை முதல் தடவையாக ஒலிம்பிக் தீபமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பித்து இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்கள் ஊடாக பயணித்து வயம்ப பல்கலைக்கழகத்தைச் சென்றடையவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வானது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இன்று 26 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம் பெறும். இதில் வயம்ப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஜெ.பி.எ. ஜெயசேகரவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டு ஒலிம்பிக் சுடரை ஏற்றி வைக்கவுள்ளனர். (கு)

## சமநிலை தவிர்ப்பு உதையில்

# இறுதிப்போட்டிக்கு தெரிவானது நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க.



சமநிலை தவிர்ப்பு உதைப்பு மூலம் பலாலி விண்மீன் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவானது நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

இளையாணன்மத்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் 2 ஆவது அரைஇறுதியாட்டத்தில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதியது.





ஆட்டத்தின் முதல் பாதியின் 12 ஆவது நிமிடத்தில் காண்டீபன் கோல் போட்டு அசத்த முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் விண்மீன் வசம் இருந்தது. இரண்டாவது பாதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்.மேரிஸ் 50 ஆவது நிமிடத்தில் யூட் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்த இறுதி நேர முடிவில் 1.1 என்று ஆட்டம் சமநிலையானது.

வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதையில் சென். மேரிஸ் கோல்காப்பாளர் சுதாவின் சிறந்த கோல் காப்பின் மூலம் 05.04 என்ற அடிப்படையில் விண்மீனை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு தெரிவானது சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம். போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் கோல் காப்பாளர் சுதா தெரிவு செய்யப்பட்டார்.(கு)

# தமிழ் மாகாண முதன்மை லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## அரையிறுதியில் மன்னார் லீக்







இதயபூமி அறக்கட்டளை நிதியத்தின் பங்களிப்புடன் வடமராட்சி லீக் நடத்தும் வடக்கு, கிழக்கு தமிழ் மாகாண முதன்மை லீக் அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிமுதல் சுற்று ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மன்னார் லீக் அணியை எதிர்த்து அம்பாறை லீக் அணி மோதிக் கொண்டது. முதல்பாதியாட்டம் 01.00 என்ற அடிப்படையில் மன்னார் லீக் அணி முன்னிலை பெற்றுஇருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் அம்பாறை லீக் அணி வீரர் ஒரு கோல் போட்டு ஆட்டத்தை சமநிலையாக்கினார். ஆட்டத்தின் சிறிய நேர இடைவெளியில் மன்னார் லீக் அணி வீரர் கோல் போட்டுஅணியின்வெற்றியைஉறுதிப்படுத்தினார். ஆட்ட நேர முடிவில் 02.01 என்ற கோல் அடிப்படையில் அம்பாறை லீக் அணியை வீழ்த்தி அரை இறுதிக்கு நுழைந்தது மன்னார் லீக் அணி.

மன்னார் லீக் அணி சார்பாக ஜனுசன் ஒரு கோலினையும் அம்பாறை லீக் அணி சார்பாக காந்தன் ஒரு கோலினையும் போட்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக மன்னார்லீக் அணிவீரர் ஜான்ஸன் தெரிவு செய்யப்பட்டார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டி

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அருணோதயா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# அல்வாய் வி.விழாவின் மரதன் ஓட்டப்போட்டி

அல்வாய் விளையாட்டு விழாவின் மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு மாலை சந்தை சிறி வரதராஜ விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

அல்வாய் கிராமத்தை சேர்ந்த வீரர்கள் கலந்துகொள்ளும் இந்த போட்டி மாலை சந்தை சிறிவரதராஜ விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பித்து மாலுசந்தி, அல்வாய் நாவலடி சந்தி, தம்பசிட்டி, காந்தியூர் ஊடாக மடத்தடி சந்தி, மீண்டும் மாலுசந்திவந்து அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நிறைவு பெறும்.

இதில் முதல் 10 இடங்களை பெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் அன்றைய தினம் காலை 6மணிக்கு முன்னர் மாலை சந்தை சிறி வரதராஜ விநாயகர் ஆலய முன்றலுக்கு வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (கு)



முல்லைத்தீவு இரணைப்பாலை றோ.க.ம.வித்தியாலயத்தின் வைர விழாவினை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அலம்பில் றோ.க.ம.வி. 3:1 என்ற கோல் கணக்கில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியை வெற்றி கொண்டு வைரவிழா கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டது.

## பரஞ்சோதி...

உறுப்பினர் பரஞ்சோதியினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருந்தால் அதனை முதலமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை குழுவிடம் சமர்ப்பியுங்கள்.

அதனை விடுத்து ஏற்கெனவே முடிந்த விடயத்தை மீண்டும் பிரேரணையாக கொண்டுவருவது மக்களிடத்தே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் என இடித்துரைத்தார். இதன் பின்னர் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், சபை விவகார குழுவில் குறித்த விடயம் கலந்துரையாடப்படவில்லை. அது தவிர ஒரு சம்பவம் தொடர்பில் ஒரு விசாரணை தானே நடத்த முடியும்.

ஒரு விடயத்தை வேறு வேறு கோணங்களில் கொண்டுவருவது நேரத்தையும் காலத்தையும் மக்களின் வரிப்பணத்தையும் வீணடிக்கும் செயல் என கூறினார்.

எனினும் பரஞ்சோதியின் இந்த பிரேரணை நியாயமானது என நியாயப்படுத்திய அவைத்தலைவர் சிவஞானம், பரஞ்சோதி இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தே கேள்விக்குட்படுத்துகின்றார் எனவும் கூறினார்.

அவைத்தலைவரின் கருத்தை மறுத்து பேசிய உறுப்பினர் சர்வேஸ்வரன், அதற்காக ஒரு பிரேரணையை சொற்பொழிவு போன்று நடத்திக்கொண்டு இருக்க முடியாது. முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்ட விடயத்தை மீண்டும் நாம் கையிலெடுக்க முடியாது எனவும் கூறினார். பின்னர் பேசிய உறுப்பினர் சிவாஜிலிங்கமும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்க குறித்த பிரேரணை பிசுபிசுத்து போனது.

முடிவில் குறித்த பிரேரணை நிறைவேற்றப்படுவதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

எனினும் இதனை பிரேரணையாக நிறைவேற்ற முடியாது என உறுப்பினர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து இதை முதலமைச்சருக்கு அறிவித்ததாக அனுப்புமாறும் சிவாஜிலிங்கம் கோரினார். அதன்படி குறித்த பிரேரணை அறிவித்தலாக நிறைவேற்றப்பட்ட சம்மதிக்கப்பட்டது. (செ-4)

## அரசியல் கைதியை...

வைத்தியசாலையில் இருந்து திடீரென காணாமல் போயுள்ள மேற்படி சம்பவத்தால் வைத்தியசாலைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சியை சேர்ந்த 37 வயதுடைய இராசையா ஆனந்தராஜா என்ற அரசியல் கைதியே நேற்று முன்தினம் இரவு 11.05 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து காணாமல்போயுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அரசியல் கைதியான இராசையா ஆனந்தராஜா, 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் மீண்டும் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி தனது விடுதலையை வலியுறுத்தி உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், ஜூன் மாதம் 17ஆம் திகதியும், அதன் பின்னர் பதினொரு நாட்கள் கழித்தும் ஊசி ஏற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவருக்கு உடல் உள பாதிப்பு ஏற்பட்டிருந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து குறித்த கைதியான இராசையா ஆனந்தராஜாவை அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்குமாறு சிறைச்சாலை மறுசீரமைப்பு மீள்குடியேற்ற புனர்வாழ்வளிப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பணிப்புரை விடுத்திருந்தார்.

கடந்த 14ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக 7ஆவது நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகளால் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு வந்த போதிலும் நேற்று முன்தினம் இரவு வைத்தியசாலையில் இருந்து திடீரென காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவும், காணாமல்போன அரசியல் கைதியான இராசையா ஆனந்தராஜாவை கண்டறிவதற்கும் பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (செ-30)

# நிலப்பயன்பாடுகள் குறித்து கட்டுப்பாட்டு நியதிச் சட்டம்!

## உருவாக்க கோரும் பிரேரணை வடக்கு அமர்வில் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் நிலப்பயன்பாடுகள் குறித்து கட்டுப்பாடுகள் விதிக்கும் நியதி சட்டம் ஒன்றை உருவாக்க கோரும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நேற்றைய தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது. உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரனால் முன்மொழியப்பட்ட குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அறுபதாவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே குறித்த பிரேரணை முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பிரேரணை மூலம் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படும் நிலை உருவாக்கப்படும் என உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் என்பது மிகப்பெரும் அளவிற்கு விவசாயத்திலும், மீன்பிடி தொழிலிலுமே தங்கியுள்ளது. எந்த தனி மனிதனோ, சமூகமோ, இனமோ, நாடோ, உணவுக்கு சுய தேவையை பூர்த்தியடையாது கையேந்தும் நிலை ஏற்படுமாயின் அதன் இருப்பு ஸ்திரத்தன்மை என்பதும் பெரும் கேள்விக்குள்ளாகும்.

அடுத்த கட்ட வளர்ச்சியினை நோக்கி செயற்பட முடியாதவாறு இவ் அடிப்படைவாத தேவையினை பூர்த்தி அடைய முடியாமையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் தடையாக அமையும். யுத்த காலத்தில் இடப்பெயர்வுகள் காரணமாகவும் பாதுகாப்பு நோக்கில் பெருமளவு விவசாய நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

யுத்தத்தின் பின் கடந்த ஏழு ஆண்டுகளில் இராணுவ ஆக்கிரமிப்பு, வீடுகள், வர்த்தக நிலையங்களுக்கான கட்டடங்கள் போன்றவற்றினால் மிக்கவளமான விவசாய நிலங்கள் பாரிய அளவில் வேகமாக அருகி வருகின்றது. எதிர்காலத்தில் வடக்கின் உணவு உற்பத்தி சுயபூர்த்தியை உத்தரவாதம் செய்ய வேண்டுமாயின் நிலப்பயன்பாடு மீதான பொருத்தமான கட்டுப்பாடுகளை விதிக்ககூடிய நியதிச்சட்டம் ஒன்று கூடிய விரைவில் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதனை இச்சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என சர்வேஸ்வரன் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்த பிரேரணை அனைவரது ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும் மீனவ நிலையங்கள், குளங்கள் என்பனவும் இராணுவத்தின் வசம் உள்ளது அவற்றையும் இந்த பிரேரணைக்குள் உள்வாங்க வேண்டும் எனவும் உறுப்பினர்களான ரவிகரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் யாழில் கட்டப்பட்டுள்ள பெரும்பாலான கட்டடங்கள் மற்றும் தற்போது கட்டப்பட்டு கொண்டிருக்கும் கட்டங்கள் உரிய அனுமதி பெறப்படாமல் கட்டப்படுள்ளன உள்ளூராட்சி திணைக்களங்களின் உரிய அனுமதிகளையும் இந்த கட்டங்களை அமைப்பதற்காக பெறவில்லை. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக வரவுள்ள நியதி சட்டம் இருக்க வேண்டும் என உறுப்பினர் சயந்தன் சுட்டிக்காட்டினார். (செ-4)

# வடக்கு மாகாண சபையின் கோரிக்கைகளை எமது அரசியல் தலைவர்களே கேட்பதில்லை

## பிரதி அவைத் தலைவர் சாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கோரிக்கைகளை எமது அரசியல் தலைவர்கள் காது கொடுத்து கேட்பதில்லை. இதனால் தான் வடக்கு மாகாணத்தின் பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை என சாடியுள்ள மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்களது மக்களது பிரச்சினைகளை பாராளுமன்றில் பேசுவதன் மூலமே தீர்வு காணமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அறுபதாவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, உறுப்பினர் சர்வேஸ்வரனால் வடக்கு மாகாணத்தின் வளங்களை பாதுகாப்பதற்கு நியதி சட்டம் ஒன்றை உருவாக்க கோரும் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது.

இதன் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். மகாவலி எல் வலயம் என்பது மிகவும் ஆபத்தான பிரதேசமாகும். இந்த வலயத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் சிங்கள மயமாக்கப்படும் ஆபத்து உள்ளது. எனினும் இந்த பிரச்சினையை வடக்கு மாகாண சபையில் கதைப்பதனால் ஒன்றும் நடக்கப் போவதில்லை.

காரணம் மகாவலி எல் வலயம் தொடர்பில் மத்திய அரசு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் எமது பாராளுமன்ற உறுப்பினர்களே கதைக்க வேண்டும். இதன் மூலமே வர்த்தமானி அறிவித்தலில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு தீர்வை எட்ட முடியும். நல்லாட்சி என கூறுபவர்கள் இதற்கு ஒரு தீர்வை பெற்று தரமாட்டார்களா?

வடக்கு மாகாண சபையும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் நில அபகரிப்பினை தான் பெரிதுபடுத்தி பேசுகின்றனர். ஆனால் வன்னியில் யாழ்.மாவட்டத்தை விட அதிகளவான மக்களின் நிலங்கள் இராணுவத்தினரால் தினம் தினம் அபகரிக்கப்பட்டு வருகின்றது. இவை தொடர்பில் ஒருவரும் கண்டு கொள்வதில்லை.

இதற்கு எதிராக நடைபெறும் மக்கள் போராட்டங்களிலும் எமது அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை. எனவே வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் எம்மவர்கள் பொதுவாக கருதி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த பாகுபாட்டுக்கு எதிராக நாம் பேசினால் கட்சியை விட்டு நீக்க போகின்றோம் என கூறுகின்றனர்.

போரின் போது வன்னி பிரதேசங்கள் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் தான் தற்போதும் அந்த மக்கள் உள்ளனர்.

ஆகவே எமது தலைவர்கள் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டும். இவ்வாறான பாகுபாடுகளால் மக்கள் எந்த நேரமும் ஒரு பக்கமே நிற்க மாட்டார்கள் என்பதனையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் பிரதி அவைத்தலைவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## இராணுவ...

கொழும்பு பாதுகாப்பு மாநாடு தொடர்பில் நேற்று பாதுகாப்பு தரப்பினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இராணுவத்தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும கூறுகையில்,

நாட்டின் பயங்கரவாத சூழ்நிலை தொடர்பில் எமக்கு நல்ல அனுபவம் உள்ளது. யுத்தம் முடிவுக்கு வந்ததில் இருந்து நாம் வடக்கில் நிலைமைகளை கையாள்வதில் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம். அதேபோல் யுத்தத்தின் பின்னர் மீள்குடியேற்றம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை நாம் பலமாக மேற்கொண்டு வருகின்றோம். சர்வதேச நாடுகளின் பார்வை எம்மீது உள்ள நிலையில் இலங்கையில் அடுத்த கட்ட நகர்வுகள் எவ்வாறானதாக அமையும் என அனைவரும் பார்த்துகொண்டுள்ளனர். அதேபோல் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் நிலைப்பாடுகளை கவனத்தில் கொள்ளவேண்டிய நிலைமைகளும் உள்ளது.

இறுதி யுத்தத்தில் நாற்பதாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறுவதும், அறுபதாயிரம் பொதுமக்கள் காணாமல்போனதாக கூறுவதும் பொய்யான கருத்தாகும். அதேபோல் விடுதலைப்புலி முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டுள்ளது என்பதும் முழுப்பொய்யான விடயம்.

வடக்கில் இன்றும் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் உள்ளன. வடக்கு கிழக்கில் மட்டும் அல்ல எந்தப்பகுதியில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படாது. வடக்கில் உள்ள இராணுவம் குறைக்கப்படும் என குறிப்பிட்டுள்ள போதிலும் முக்கியமான முகாம்கள் எவையும் அகற்றப்படுவதாக நாம் கூறவிலலை.

அதேபோல் வடக்கில் இருந்து முகாம்களை அகற்றும் தீர்மானமும் இல்லை. தேசிய பாதுகாப்பு விடயத்தில் நாம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றோம் என இராணுவத்தளபதி கிரிஷாந்த டிசில்வா தெரிவித்தார். (செ-11)

## மன்னாரில் கோடி...

மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலையடுத்து, மன்னார் மாவட்ட பதில பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸின் வழிகாட்டலின் கீழ், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோவின் ஆலோசனைக்கு அமைவாக மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உதயகுமாரசிங்கம் கௌசிகன் தலைமையில் சென்ற உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ரி.எஸ்.டி.ராஜபக்ஷ, பொலிஸ சார்ஜன்ட்களான வடுகே (25350), றிபாச் (5627), பொலிஸ்கொஸ்தபாள்களான றொசான (40735), ரத்னாயக்க (71580), பண்டார (44198), அஸங்க (80846), பொலிஸ் சாரதி வசந்த (80873) பொலிஸ் குழுவினரே குறித்த ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

விரைந்து செயற்பட்ட பொலிஸ் குழுவினர நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4.15 மணியளவில் ஹெரோயின் போதைப் பொருளுடன் கட்டையடம்பன் பாலப்பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து முதலில் 723 கிராம் எடை கொண்ட ஹெரோயின் பொதி மீட்டப்பட்டது. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது குறித்த சந்தேக நபர் சிறுத்தோப்பில் அமைத்துள்ள மீன் வாடியில் பதுக்கி வைத்திருந்த மேலும் 272 கிராம் எடை கொண்ட ஹெரோயின் பொதி மீட்கப்பட்டது.

இவ்வாறு சுமார் 995 கிராம் எடை கொண்ட குறித்த ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதோடு, மேலும் குறித்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 3 கிலோ 329 கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சாப்பொதியும் மீட்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட குறித்த நபர் மன்னார் பேசாலை கிராமத்தைச் சேர்ந்தவர் எனவும், மேலதிக விசாரனைகளை போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருவதாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உதயகுமாரசிங்கம் கௌசிகன் மேலும் தெரிவித்தார். (செ-4-9)

## வழக்கு விசாரணை...

குறித்த மோதலின் போது காயமடைந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்த மாணவர் ஒருவர் தன்னை தாக்கியது மாணவர் ஒன்றிய தலைவர் என்றும் மோதலில் ஈடுபட்டதாக அவருடன் சேர்த்து 3 தமிழ் மாணவர்களை குறிப்பிட்டு பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் முதலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் சிசிதரனை விசாரணைக்காக அழைத்திருந்தனர்.

ஆனால் குறித்த மாணவன் பொலிஸ் நிலையத்துக்கு செல்லாமல் நீதிமன்றில் ஆஜராகி கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவருடைய வழக்கு விசாரணை நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அத்துடன் கோப்பாய் பொலிஸாரினால் அழைக்கப்பட்ட ஏனைய 3 மாணவர்களும் நேற்றைய தினம் மன்றில் ஆஜராகி இருந்தனர். அவர்களை தலா 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய தலா ஒரு ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டதுடன் 3 மாணவர்களும் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் தமது வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறும் கட்டளையிட்டார்.

மேலும் மாணவர் ஒன்றியத் தலைவரினது வழக்கு விசாரணையையும் ஏனைய 3 மாணவர்களுடைய வழக்கு விசாரணையையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (செ-9)

## 30 துப்பாக்கிகள்...

வவுனியாவில் விடுதலைப்புலிகளால் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகள் என சந்தேகிக்கப்படும் முப்பது துப்பாக்கிகள் ஓமந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது

நேற்றையதினம் வவுனியா ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றை சுத்திகரிக்கும் போது அங்கு துப்பாக்கிகள் மண்ணினுள் புதைந்து இருப்பதனை அவதானித்த காணி உரிமையாளர் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தைப் பொலிஸார் குறித்த பகுதியில் இருந்த விடுதலைப் புலிகளால் பாவிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் முப்பது எல் .எம்.ஜி ரக துப்பாக்கிகளை மீட்டுள்ளனர்.

இவை பாவனைக்கு அற்ற நிலையில் இருப்பதாகவும் எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா நீதிமன்றில் அனுமதி பெற்று குறித்த பகுதியில் மீண்டும் தோண்டும் பணியை ஆரம்பிக்க இருப்பதாக ஓமந்தை பொலிஸ் வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-312)

## காணாமல்போ...

ஆயிரக்கணக்கான புகார்கள் முன்வைக்கப்பட்டதாக மங்கள சமரவீர தெரிவித்தார்.

காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் பரணகம ஆணைக்குழுவின் தகவல்களுக்கு அமைய 24ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல், யுத்தத்தின் போது 5 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படை உறுப்பினர்கள் காணாமல்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் காணாமல்போயுள்ள காரணத்தினால் அவர்களது உறவினர்கள் பாரிய சட்ட சிக்கல்களை சந்தித்து வருவதாக கூறிய அமைச்சர் சமரவீர, இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இவ்வாறான சிக்கல்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடியுமென்று தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்தின்படி காணாமல் போயுள்ள ஒரு நபர் இரண்டு வருடங்களுக்குள் திரும்பி வராவிட்டால் அவர்களுக்கு இந்த காணாமல்போனோர் தொடர்பான சான்றிதழ் வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

அதே போன்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஒரு நபர் இறந்துவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்டால் அந்த நபரின் உறவினர்களுக்கு, இறந்த நபரின் இறப்பு சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

## “போதையிலிருந்...

அரச அதிபர் அலுவலகத்தில் குறித்த விடயம் தொடர்பாக நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 4 பிரதான தேசிய செயற்திட்டங்களான தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம், போதையில் இருந்து விடுபட்ட நாடு நிகழ்ச்சித்திட்டம், தேசிய சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், தேசிய சிறுநீரக நோய்த்தடுப்பு திட்டங்களில் போதையில் இருந்து விடுபட்ட நாடு எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட மட்ட 8 ஆவது நிகழ்வு யாழில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னாயர்த்த விழிப்புணர்வு நிகழ்வுகள் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் செப்ரெம்பர மாதம் 9 ஆம் திகதி வரை ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்திலும் நடைபெற்று வருகின்றது.

இறுதி நாளான செப்ரெம்பர் மாதம் 9 ஆம திகதி 10 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் அனைத்து திணைக்களங்களில் இருந்தும் போதை ஒழிப்பு தொடர்பாக சிறந்த பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், மதுவரித்திணைக்களத்தினர், சுகாதாரத்துறையினர், பிரதேச செயலர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், போதைப் பொருள் தடுப்பு பிரிவினர், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சார்ந்தவர்கள் உட்பட 3 ஆயிரம் பேர் வரையில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய தினம் யாழ் குடாநாட்டில் உள்ள அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்படவேண்டும் என்றும் அனைத்து வியாபார நிலையங்களிலும் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது தடை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## சட்டமூலத்தில்...

தங்களை தாங்கள் முன்வைத்ததாக கூட்டு எதிர்க்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

எனவே, இந்த சட்டமூலத்தில் திருத்தங்களை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த பின்னணியில் நேற்று நாடாளுமன்றம் கூடிய போது, கருத்துக்களை தெரிவித்த பிரதமர் விக்கிரமசிங்க சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படுமென்று அறிவித்தார். (செ-11)

## பரஞ்சோதி முன்...

தினம் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட எந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களும் பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண சபையின் அறுபதாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது உறுப்பினர் பரஞ்சோதியினால், விவசாய அமைச்சில் நடைபெற்ற மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள், தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன.

ஆகவே இந்த சபை ஒரு சுயாதீனமான பக்கச்சார்ப்பின்றிய விசாரணை மேற்கொள்ளும் முகமாக ஒரு தெரிவுக்குழுவை அமைத்து நடவடிக்கை எடுப்பதோடு அக்குழு சுதந்திரமான விசாரணை செய்து விளக்கமாக அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது.

இந்த பிரேரணை முன்மொழியும் போதே உறுப்பினர் பரஞ்சோதி சுமார் முப்பது நிமிடங்கள் வரை பேசிக்கொண்டே இருந்தார். இதனால் கடுப்படைந்த உறுப்பினர்கள் இதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதலில் பேசிய உறுப்பினர் தியாகராசா, குறித்த பிரேரணை கட்சி கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது. எனவே ஒவ்வொரு கூட்டத்திலும் இதே பிரேரணையை கொண்டுவருவது ஏற்றுக் கொள்ள முடியாது என கடுமையாக எதிர்த்தார்.

இதன்போது நீங்கள் வால் பிடிக்கின்றீர்கள் என பரஞ்சோதி கூற கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதற்கு கணிசமான உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்க குறித்த வார்த்தை சபைக்குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டது.

இதன் பின்னர் பேசிய உறுப்பினர் சர்வேஸ்வரன், இடம்பெற்றதாக கூறப்படும் குறித்த மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்த பிரேரணை மீண்டும் தேவையற்றது என கூறி கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இதன்போது பேசிய உறுப்பினர் சிராய்பா மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து ஏற்கெனவே மக்களிடத்தில் நம்பிக்கையீனம் காணப்படுகின்றது. இந்த நிலையில் மீண்டும் ஒரு பிரேரணை தேவையற்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரித்தானிய கடலில் மூழ்கி...




னர்.

தற்போது லண்டனில் கடும் வெப்பம் நிலவுவதாலும் விடுமுறை காலமாகவும் இருப்பதாலும் கடற்கரையில் பெருமளவு மக்கள் கூடி குளியல் மற்றும் கடல் விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலைமையிலேயே நேற்று முன்தினம் இவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாக பிரித்தானிய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-9)


FALC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
(C-5543)
விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)
DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.
இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

தேவை
திருநெல்வேலியிலுள்ள எமது
பட்டய கணக்காளர் நிறுவனத்திற்கு
கணக்கியல் பயிலுநர்கள் தேவை.
A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர்,
Chartered, CIMA
Students விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு :-
(5730)
077 9530 496

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
ஆசிரியர் சேவை
ஞாயிறு - 2.00 pm - 6.00 pm
கணக்காய்வாளர் சேவை
சனி - 8.30 am - 12.00 am
ஞாயிறு - 8.30 am - 12.00 am
EB Exam - D.O.PMA (I,II,III)
சனி - 3.00 pm - 6.00 pm (FR-AR)
ஞாயிறு - 4.00 pm - 6.00 pm (IT)
கிராமசேவகர் (GS)
ஞாயிறு - 8.30 am - 12.00am
செவ்வாய் - 03.00 pm - 6.00 pm
கூட்டுறவாளர் சேவை
வியாழன் - 4.30 pm - 6.30 pm
ஆங்கில சிங்கள வகுப்புக்கள்
Batch I :- சனி, ஞாயிறு
Batch II :- கிழமை நாட்களில்
பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கானது
உயர்கல்லூரி
NSB வங்கியின் மேல்மாடி
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P No :- 077 876 0992 077 344 3962

அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
(C-5531) V2 TRAVELS
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
உதவி முகாமையாளர் (Assistant Manager)
கொடுப்பனவு -25,000/= வயது எல்லை 20-30 வரை
எதிர்பார்ப்புக்கள் -A/L, ஆட்டோ வான் லைசன்ஸ் அவசியம்
வடமராட்சியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
வல்வெட்டித்துறை 0768226243


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.